www.tamilarangam.net

Kaya

# சஞ்சீவி

மலர். 16

Chanchive 16.Udgave



www.tamilarangam.net




# சஞ்சீவி

மலர் 16
ஆகஸ்ட் - செப்ரெம்பர் 1991

உள்ளடக்கம்

3. நோக்கு.
7. கட்டுரை: நாடு கடத்தப்படுவோமா?
8. கட்டுரை:
"நண்பர்கள் பகைவர்களாவதேன்?"
15. கடிதங்கள்
20. கட்டுரை:
"போதைவஸ்து அடிமைகளுக்கு"
25. கட்டுரை:
"ஒண்டவந்த பிடாரியே ஈழத்தமிழரை விரட்டாதே:"
30. கவிதை:
"ஆச்சிக்கும் பிரச்சினை"...
35. கவிதை:
"ராஜினி"
36. கவிதை:
"நீளமான காலங்கள்"
37. சிறுகதை: "PRØVE NOGET NYT".
45. நோயின் தொடர்விளைவும்.
48. குறுக்கெழுத்துப்போட்டி இல 15

அட்டைப்படம்

T. சௌந்தர்

**10 KR.**

சஞ்சீவியின் தொடர்புகளுக்கு
CHANCHIVE
POST BOX - 1205
7500 HOLSTEBRO. D.K.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நோக்கு

உலகில் இன்று என்றுமில்லாத அளவில் மக்கள் அகதிகளாக்கப்பட்டு வருவது அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றது. இவற்றில் அரசியல் பிரச்சனைகளால் அகதிகளாக்கப்படும் மக்களின் தொகையும், இயற்கையின் அழிவுகளால் அகதிகளாக்கப்படும் மக்களின் தொகையும் அடங்கும். ஆனால் அரசியற் காரணங்களுக்காக அகதிகளாக்கப்பட்டவர்களின் பிரச்சனைகள் மிகவும் துன்பகரமானதாகவே இருக்கின்றது. அந்த வகையில் உலகெங்குமுள்ள பல்லாயிரக்கணக்கான அகதிகளில் இலங்கைத் தமிழர்களும் அடங்குவர். இன்று சர்வதேச ரீதியில் இலங்கைத் தமிழர்கள் என்றால் அகதிகள் என்று மற்றவர்கள் கூறும் அளவிற்கு வளர்ந்துள்ளது.

இவ்வகதிகளில் ஒரு பகுதியினர் மேற்கத்திய நாடுகளிலும், பலர் இந்தியாவிலும், இலங்கையிலும் வாழ்கிறார்கள் என்பது எல்லோரும் அறிந்ததே. இவர்களில் வெளிநாடுகளில் வாழும் தமிழ் அகதிகள் இலங்கை, இந்தியாவில் வாழும் அகதிகளை விட வசதியான வாழ்க்கையை வாழ்கின்றார்கள். ஆனால் இலங்கையில் எமது சகோதரர்கள் ஒரு நேர உணவிற்கே உயிரைக் கொடுத்து போராடும் நிலை இன்று காணப்படுகிறது. இவர்கள் அதற்கான போராட்டங்களிலும் இறங்கியுள்ளதாகவும் இலங்கையிலிருந்து வரும் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன.

உதாரணமாக வீரகேசரியில் வெளிவந்த ஒரு செய்தியில் "அகதிமுகாம்களுக்கு வெளியே வட பகுதியில் சுமார் நாலு லட்சத்திற்கும் மேலான மக்கள் அகதிகளாக வாழ்கின்றார்கள். வடபகுதியில் கடந்த இருவருட காலத்துக்கு மேலாக மேற்கொள்ளப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை நீக்கி ஏனைய இடங்களைப் போல் வடபகுதி மாவட்டங்களிலும் கட்டுப்பாட்டு விலையில் உணவு மற்றும் பாவனைப் பொருட்களைக் கிடைக்கச் செய்ய உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரி பரவலாக ஊர்வலங்களும், மறியல் போராட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன. நிவாரண உலருணவு கோரி ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்ட ஊர்வலம் ஒன்று புறப்பட்டுச் சென்று முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் பணிமனையை அடைந்து மக்கள் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்."

தாமரைக்கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு, பப்பாசிக்காய்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எரிபவற்றைக் கடித்த வண்ணம் சென்ற ஊர்வலத்தினர் "இன்னும் எத்தனை நாளுக்கு நாங்கள் இவற்றை உணவாகக் கொள்வது" எனக் கோரும் மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளார்கள். ஜனாதிபதிக்கு முகவரியிடப்பட்டிருந்த அந்த மகஜரில் விவசாயம், மீன்பிடி போன்ற ஜீவனோபாயத் தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளதால் மக்கள் பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். பொருளாதாரத் தடைகளை நீக்கி போதியளவு உணவு- உலருணவு, மற்றும் எரிபொருட்கள் என்பவற்றை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கவும் எனக் கோரப்பட்டுள்ளது.

இதேவேளை 6.8.91 அன்று யாழ்ப்பாணச் செயலகத்துக்கு முன்னால் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட ஆயிரக் கணக்கான மக்கள் வட பகுதிக்கான பொருளாதாரத் தடையை நீக்கி ஏனைய இடங்களைப் போல் கட்டுப்பாட்டு விலையில் பொருட்களை மக்கள் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனக் கோரும் மகஜர் ஒன்றையும் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகரிடம் கையளித்துள்ளனர்.

நாட்டில் இன்று சாதாரண ஒரு புணங்காயே 25 ரூபாவிற்கு விற்கப்படும் ஒரு பொருளாக மாறியிருக்கின்றது. நிலைமைகள் இவ்வாறிருக்கும் போது பொதுவாக ஐரோப்பிய நாடுகளில் வெளிவரும் விடுதலைப் புலிகள் சார்பான பத்திரிகைகள் இங்கு எதிர்மாறான பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றன. உதாரணமாக பிரான்சில் வெளியான "எரிமலை" (ஏப்ரல் 1991) என்ற பத்திரிகை பின்வருமாறு எழுதியுள்ளது.

"விடுதலைப் புலிகளின் திட்டமிட்ட நடவடிக்கைகள், மக்களின் இயற்கையான கடின உழைப்பு, புதிய சூழலுக்கு எளிதாக இயல்பாகும் தன்மை, சளைக்காத போராட்டம், ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் பொருளாதாரத் தடை ஆகியவை உயிர் வாழ்வதற்கும் தேவையான சுய பொருளாதாரத்தை தமிழீழ மண்ணில் கட்டி வருகின்றன. விரைவில் தமிழீழம் ஸ்ரீலங்காவின் பொருளாதார ரீதியில் தங்கியிருக்கும் நிலையிலிருந்து விடுபடுவதோடு பொருளாதாரச் சாத்தியப்பாடு குறித்து பத்தாம்பசலித்தனமான கேள்வி எழுப்பியவர்கள் முகத்திலும் அறையும்" என்று குறிப்பிட்டுள்ளது.

அண்மைக்கால இடைவெளிக்குள் ஏறக்குறைய 30 ஆயிரத்திற்கும் மேலான தன் இன மக்களையே கொன்று குவித்த பொத்த, சிங்கள பேரினவாத அரசு இராணுவரீதியான பாதிப்புக்களை தமிழ்

www.tamilarangam.net

மக்களுக்கு ஏற்படுத்துவதிலும் பார்க்க மிகவும் கொடூரமான மனிதாபிமானமற்ற முறையில் பொருளாதாரத் தடைகளை விதித்து மக்களை நாளுக்கு நாள் பட்டினியால் கொன்று குவித்துக் கொண்டிருக்கின்றது. அரசாங்கத்தினர் தங்களை உலகிற்கு நியாயப்படுத்துவதற்காக வட மாகாணத்திற்குக் கொண்டு செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ள பொருட்களில், அதுவும்கூட சில பொருட்களைக் கொண்டு செல்ல அனுமதித்த அரசு இவ்வளவு, இவ்வளவு பொருட்களைத் தான் கொண்டு செல்ல வேண்டும் எனவும் அதற்கென ஒரு வரையறையையும் போட்டிருப்பது மிகவும் கொடுமையானது.

இக்கொடிய அரசு தரும் சில சலுகைகளைக் கூட பெற்றுக் கொள்ளுவதற்கு மக்கள் படும் கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. இருந்தும் அந்தச் சலுகைகளைப் பெறவே மக்கள் முனைகின்றனர்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கென கப்பல் மூலம் பருத்தித்துறைத் துறைமுகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட சுமார் 952 மெட்ரிக் தொன் உணவுப் பொருட்களை மேற்படி மாவட்டங்களுக்கு லொறிகள் மூலம் எடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் அத்தியாவசியத் தேவைகள் ஆணையாளருக்கு அறிவித்துள்ளார். லொறிகளுக்குத் தேவையான டீசல் வழங்கப்படாமையாலும், ஊரடங்குச் சட்டம் காரணமாகவும் உணவு விநியோகம் தடைப்பட்டதால் உணவுப் பற்றாக்குறையை எதிர்நோக்கியிருந்த இவ்விரு மாவட்டங்களும் மேலும் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒருபுறம் அரசாங்கம் மக்களிடம் தாம் கடுமையாக நடந்து கொள்ளவில்லை என்பதற்கு சில சலுகைகள் செய்வதும், மறுபுறம் புலிகள் தாங்கள் பொருளாதாரத்தில் சுயநிறைவு அடைந்து வருகிறோம் என்பதன்மூலம் மக்களின் பிரச்சனைகளை வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் மத்தியில் விளங்கிக் கொள்ளாத வகையில் மழுங்கடிக்கின்றனர்.

வெளிநாடுகளில் வாழும் எமது கடமை எமது மக்களுக்கு எம்மால் தற்போது என்ன செய்ய முடியும் என்பதே. எம்மால் முடிந்தளவு நிதி சேகரித்து எமது மக்களுக்கு உண்மையாக உதவிசெய்யும் ஸ்தாபனங்களையும், நிறுவனங்களையும் ஆதரித்து உதவியளிப்பது மிக, மிக அவசியம். இதுவே இன்றைய எமது கடமையுமாகும்.

www.tamilarangam.net

இன்று எங்களிற் சிலருக்கு டென்மார்க் குடியுரிமை (நிரந்தர பிரஜாவுரிமை (CITIZENSHIP) கிடைத்துள்ளது. இன்னும் பலருக்குக் கிடைக்கவுமுள்ளது. இப்படியான நிலையில் - எமது மண்ணிலும், இந்தியாவிலும் கஷ்டங்களை அனுபவிக்கும் எமது சகோதரர்களையும் ஒரு கணம் நினைத்துப்பார்த்து அதற்கான உதவிகளை இயன்றளவு செய்ய முன் வருவதே எமது தாயகத்தை, எமது மக்களை உளப்பூர்வமாக நேசிப்பவர்களினது கடமையாகும்.

- சஞ்சீவி -



# மக்கள் விரோதிகளின் நகைச்சுவைகள்

**இலங்கையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் அனைவரும் சுயகௌரவதுடன் வாழலாம். யாருக்கும் அநீதி இழைக்கப்படமாட்டாது. வன்முறையை வெறுப்போம். அஹிம்சை வழியில் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண ஒன்றுபடுவோம்.**
**(முஸ்லிம் காங்கிரஸின் 10ஆவது வருடாந்த தேசியமகாநாட்டில் பிரேமதாச)**

**இந்தியாவுடன் தேவையில்லாமல் பகைத்துக்கொள்வதால் இலங்கைக்கு எதுவித நன்மையும் கிடைக்கப்போவதில்லை. இந்தியாவுடன் ஒத்துழைப்பதன் மூலம் எமக்கு இன்னும் பல நன்மைகள் கிட்டும் என்பதை மனதில் கொள்ளவேண்டும்.**
**(பாராளுமன்றத்தில் EPRLF எம்.பி. பிறேமச்சந்திரன்)**

தொடர்ச்சி பக்கம் 9



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாடு கடத்தப்படுவோமா..?

ஜேர்மனியிலிருந்து தமிழகதிகளை இலங்கைக்குத் திருப்பியனுப்பவிருக்கும் விஷயம் இன்று இலங்கைவரை பரவி, முக்கிய செய்தியாக அடிபடுகிறது. யூன் மாதம் 30ஆம் திகதிக்குப் பின்னர் எங்தவித தகுதியான விசாவுமில்லாமல் திகிலடைந்து போயிருந்த அகதிகளின் குழப்பம் இன்னும் தீரவில்லை.

உண்மைச் செய்திகளை விட வதந்திகளே எல்லோரையும் தேவையற்றுப் பயமுறுத்தின. "திருப்பியனுப்புவதென்றால் விலங்கு போட்டுத்தான் அனுப்புவார்கள்"என்று ஒரு மூலையில் ஆரம்பிக்கும் உரையாடல் மறுமூலைக்குப் போய்த் திரும்பிவரும்போது, "ஒரு தமிழ் ஆளை விலங்கு போட்டு விமானத்தில் ஏற்றியதை தொலைக்காட்சியில் காட்டினார்கள்.நான் பார்த்தேன்"என்று உருமாற்றம் பெற்றிருக்கும். வதந்திகளை நம்பாமல் உண்மைத் தகவல்களைப் பெற சட்டத்தரணிகளுடனும்,அகதி உதவி நிறுவனங்களுடனும் நேரடியாகத் தொடர்பு கொள்வதே பயனுள்ளதாகும்.

முதலில் யூலை 1ஆம் திகதியிலிருந்து என்ன மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதைப்பார்ப்போம்.

பலரும் கருதுவதைப் போல புதிய சட்டம் எதுவும் யூலை மாதம் இயற்றப்படவில்லை.1991 ஜனவரி மாதம் அமுலுக்கு வந்த புதிய வெளிநாட்டவர் சட்டத்தின் பிரகாரம்,அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்டாலும்,தாய் நாட்டில் பிரச்சினை சுமுகமாகும்வரை தற்காலிகமாக ஜேர்மனியில் தங்க அனுமதிக்கும் "சகிப்புப் பத்திரம்"(Duldung) என்ற நடைமுறை யூன் மாதம் 30ஆம் திகதியுடன் முடிவடைந்துவிட்டது.

அதாவது ,டுல்டுங் பத்திர நடைமுறை இல்லாததால் அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்கள் அவர்களுடைய தாய் நாடுகளுக்குத் திருப்பியனுப்பப்படுவார்கள் .இதுவே தற்போது நடைமுறைக்கு வந்துள்ளது.

இரண்டாவது, இதுவரையில் இன அல்லது குழு அடிப்படையில் - தஞ்சம் நிராகரிக்கப்பட்டாலும் - தற்காலிகமாக தாய் நாட்டில் பிரச்சினை முடியும்வரை இங்கு தங்க அனுமதிக்கப்பட்டது. உதாரணமாக தமிழர்கள் என்ற அடிப்படையிலேயே தமிழ் அகதிகள் திருப்பியனுப்பப்படாமல் டுல்டுங் பத்திரம் வழங்கப்பட்டது.இந்நடைமுறை இனிமேல் இல்லாததால் தனித்தனியாக ஒவ்வொரு அகதிகளும் விசாரிக்கப்பட்டு அவர்கள் ஏன் திரும்பி

தொடர்ச்சி பக்கம் 53


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நண்பர்கள் பகைவர்களாவதேன்?

முயன்றால் வாழ்வதற்குத் தேவையான சகல வசதிகளையும் எம்மால் உருவாக்கிட முடியும். ஆனால் மனம் விட்டுப் பேசப் பழக சாத்தியமான நண்பர்களை உருவாக்குவது உண்மையிலே மிகவும் கடினமானது.

அப்படிக் கஸ்ரப்பட்டு உருவாக்கிய நட்பில் தொய்வு பிரிவு மனக்கசப்பு ஏற்படும் பட்சத்தில் அதை எம்மால் தாங்கிக் கொள்வது மிகவும் கடினமானதொன்று.

என்னைத் தொட்டு தாலிகட்டியவரே என்னைப் பார்த்து என்ன கேள்வி கேட்பார். இதற்குப் பிறகும் அவருடன் நான் குடித்தனம் நடத்துவதென்றால் சூடு சுரணை இல்லாத மரமாகத் தான் நான் இருக்க வேண்டும் என்று கணவன்-மனைவி இடையே மனக்கசப்பு ஏற்படுத்துவதும்,

இவ்வளவு நாளும் என்னுடன் சேர்ந்து இருந்து என்ன மாதிரி இருந்த இந்தச் சாந்திக்கு இப்ப திடீரென என்ன நடந்ததோ தெரியாது 2,3 நாட்களாக என்னுடன் வடிவாக முகம் கொடுத்து பேசவே மாட்டேன் என்று மூஞ்சியை "உம்" என்று வைத்திருக்கு என்று தோழியர் இடையே தொய்வு ஏற்பட்ட ஒரு பெண்ணின் மனச்சலிப்பும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான் எவ்வளவு தான் அவர்களுடன் அன்பாக பேசி அவர்களுக்காக வாடி இருந்தாலும் அதுகள் ஏன் தானோ என்னை வெறுத்தெறிஞ்சு பேசுதுகள், எப்ப பார்த்தாலும் என்னை ஒதுக்கி வைக்குதுகள் என்று பள்ளி மாணவ மாணவியர் பரிதவிப்பதும் நட்பினால் ஏற்பட்ட துயரச் செய்தியே தான்.

இந்த மனமாற்றத்துக்கு காரணம் தான் என்ன? இதை எப்படி நிவர்த்தி செய்ய முடியும்.

பொய், வதந்தி, தாழ்வு மனப்பான்மை, புரிந்து கொள்ளும் தன்மையின்மைதான் இந்த நட்பின் பிரிவை வெறுப்பை ஏற்படுத்துவதாக மனோ தத்துவ நிபுணர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றார்கள். எப்படியென்றால்,

---

**தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முக்கிய தலைவரான உமா மகேஸ்வரனின் இழப்பு புளொட்டுக்கு மட்டுமல்ல ,தமிழ் பேசும் இனத்திற்கே பேரிழப்பாகும். அவர் ஆற்றிவிட்டுச் சென்ற பணிகளை நாம் நினைவுகூருவோம். (லண்டனில் நடந்த நினைவாஞ்சலிக் கூட்டத்தில் ENDLF உறுப்பினர்)**

தொடர்ச்சி பக்கம்:32

---

பக்தன்: சுவாமி என்ர மாமா நல்ல கடவுள்பக்தி உள்ளவர். முந்தநாள் அவரை அநியாயமாக ஆமி சுட்டு கொன்றுபோட்டாங்கள்.

சுவாமி: குழந்தாய்! கவலை கொள்ளாதே. உனது மாமா சுட்டுக் கொல்லப்படவில்லை, அவர் ஆண்டவரால் ஆட்கொள்ளப்பட்டுள்ளார்.

பக்தன்: !!!

-லோகன்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எமது ஆருயிர் நண்பனோ - நண்பியோ பற்றி ஒரு விடயம் தவறாக கேள்விப்படும் பட்சத்தில் அந்தச் சம்பவம் உண்மையா பொய்யா என்று எமது பகுத்தறிவால் சீர்தூக்கிப் பார்க்காது வாயிருக்கு என்பதற்காக வேறு யாரோ சொன்ன வதந்தியை அப்படியே நம்பி எமது மனத்தையும் கண்டபடி ஓடவிட்டு எமது நண்பர்களைப் பற்றியொரு கூடாத அபிப்பிராயத்தை அடிமனத்தில் தேக்கி வைப்பதனால் பின்பு அவரைக் காணும் சந்தர்ப்பங்களில், தான் கேள்விப்பட்ட விடயத்தை கதைத்து உண்மையை அறியவும் மனம் வராது, தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று தான் நினைத்ததையே சரி என்று நினைப்பதனால் மாசு மறுவற்ற தூய நட்பில் மாசு படிகின்றது. இது இப்படியே தொடருமானால் தூயதொரு நட்பின் இடைவெளி அதிகமாகி அதன் கட்டுக்கோப்பு விலகக் கூடும். நாளடைவில் நண்பர்கள் பிரிய நேரிடலாம்.

எனவே தவறாகப் புரிந்து கொள்ளும் தன்மையை விட்டு, மனம் விட்டு உங்கள் நண்பர்களுடன் பேசி உண்மை நிலையை அறிய முடியும். உ+ம்:- உங்கள் நண்பர்களைப் பற்றியோ, நண்பிகளைப் பற்றியோ ஏதாவது வதந்தி கேள்விப்பட்டால் அதை அப்படியே நம்பி அதற்கு உயிர் கொடுக்காது அது சம்பந்தப்பட்டவர்களை அணுகி மனம் விட்டுப் பேசி உண்மை நிலையை அறிவது ஒரு ஆரோக்கியமான நட்பை அமைதியாக வழிநடத்திச் செல்ல முடியும். இப்படிச் செய்ய எம்மில் எத்தனை பேரால் முடியும் என்பது ஒரு பெரிய கேள்விக் குறியே தான்.

நண்பர்களிடையே கேலி கிண்டல் இருப்பது சகஜமே. நாலுபேர் சேர்ந்தால் ஒரு விடயத்தைப் பற்றியோ ஒருவரைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பற்றியோ கேலி கிண்டல் செய்வது விமர்சிப்பது தவிர்க்க முடியாத விடயம். ஆனால் இப்படிச் செய்யும் கேலியும் கிண்டலும் வாள் முனையில் நடப்பதற்குச் சமன். இப்படி நண்பர்கள் செய்யும் கேலியும் கிண்டலும் ஒருவரை ஒருவர் தனிப்பட்ட முறையில் தாக்குவதாக இல்லை, வேதனைப்படுத்துவதாக அமையுமானால் அதுவே நல்லதொரு நட்பில் நீக்கல் விழக் காரணமாகின்றது. இதுவே ஒரு தாழ்வு மனப்பான்மை உடைய ஒருவரைச் சென்றடையுமானால் அங்கே நட்பு இரு கூறாக்கப்படுவது உறுதி. எனவே கேலி கிண்டல் செய்யும் போது அது தனிப்பட்ட ஒருவரின் சொந்த விடயம் இல்லாததாக இருப்பது மிகவும் அவசியம். அடுத்து இப்படிக் கேலி கிண்டல் என்று வரும்போது அதை வெறும் பகிடியாகவே எடுத்து அந்த நேரத்தில் மட்டுமே சிரித்து ரசித்துவிட்டு அதை அந்த இடத்திலேயே விட்டு விடவும்-வேண்டும். இது தான் நல்ல நண்பர்கட்கு அழகு முறையும் கூட.

அதைவிட்டு மாறாக அவர் விட்ட நக்கல் நளினம் எல்லாம் எனக்கே தான் "அவன் நினைக்கின்றான் இதைக் கூட என்னால் புரிந்து கொள்ள முடியாத ஜடம் நான் என்று" என வேண்டாத பிரச்சினைக்குள் மனதை சிக்க வைத்து வரிந்து கட்டிக் கொண்டு வாய்க்கு வந்தபடி பேசி விலை மதிப்பில்லாத நட்பை முறிப்பது மொட்டாள் தனமானது. அப்படித் தான் அவர் அடிக்கும் நக்கல் எனக்குத் தான் என்று தெரியவரும் பட்சத்தில் அது எதை நண்பர்கள் தானே சும்மா பகிடிக்குத் தானே சொன்னார்கள் என்று பெரிய மனத்துடன் நட்பாக நினைத்துப் பாருங்கள். அங்கே ஆத்திரம் வருவதில்லை. எனவே விட்டுக் கொடுத்து நடக்கும் விசிய மனப்பான்மை குறையும் போது அங்கே கோபம் -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குழிதோண்டு எத்தனையோ வருடங்களாக உருவாக்கிய உயர்ந்த நட்பை ஒரு நொடியில் உடைத்தெறிந்து விடுகின்றது. பார்த்தீர்களா இந்தக் கோபம்.

ஆனாலும் இந்த விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை நம்பில் எத்தனை வேகங்கு வருகின்றது. இது கணவன் மனைவிக்குக் கூட பொருந்தும். நல்ல நண்பர்களாக இருந்து, விட்டுக் கொடுத்து வாழும் கணவன் மனைவியர்களே உண்மையான நல்ல . இல்லற வாழ்க்கையை அனுபவிக்கின்றார்கள்.

நட்பினுக்குள் பகைமை வராமல் பாதுகாப்பது எப்படி? எப்போதும் சிரித்த முகத்துடனும், நட்பாக இருக்கும் எண்ணம், மனநிலை வரவேண்டும். நண்பர்களைக் கண்டதும் சிரித்து உரையாட வேண்டும். மாறாக மூஞ்சியை "உம்" என்று வைத்திருக்காது செந்தடிப்பாக இருக்க வேண்டும். நண்பர்களாக விரும்பி எதையாவது சொல்லும் பட்சத்தில் அது அவர்களின் பிரச்சினை விடயமாகவும் இருக்கலாம். அதை ஆர்வத்துடன் கேட்டு அதற்கேற்ற ஆலோசனைகள் சொல்வது ஒரு நல்ல நண்பனின் கடமை. நண்பர்களை வழித்தெருவில் கண்டவுடன் தந்நிலைகளை மறந்து உங்களைப் பற்றியே புகழ்பாடி நண்பர்களை அறுக்க வேண்டாம். உங்கள் அறுவை தாங்க முடியாமலே சிலர் கண்டும் காணாதது போல போக எத்தனிப்பார்கள். இதனால் வீண் மனஸ்தாபம் ஏற்படலாம்.

ஒவ்வொருவனும் பிழை செய்யக்கூடியவனே, ஆனால் மடையனைத் தவிர வேறு யாரும் பிழையைத் தொடர்ந்து செய்யமாட்டான்.

— ஸிஸரோ —



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பேச்சு சிந்தனை எப்போதும் நல்லவற்றைப் பற்றியே இருப்பது நல்லது. பிரச்சினை சிக்கல் என்று வரும் போது ஓர் நல்ல மந்திரி போன்று திறமையான அறிவுரை சொல்லும் நண்பனாக இருக்க வேண்டுமே தவிர சந்தர்ப்பம் பார்த்து கவிழ்த்து விடும் எண்ணம் கடைசி வரை வரக் கூடாது. பிரச்சினை வாக்கு வாதம், மனக்கஸ்ரம் சந்தேகம், இவை போன்றன எழும் பட்சத்தில் அதை உடனேயே சம்பந்தப்பட்டவர்களுடன் மனம் விட்டுப் பேசி நல்லதோர் தீர்வை எடுப்பது மிகவும் அவசியம். நண்பர்களை எடைபோடும் போது அவர் அவர்களின் சிறந்த குணாதிசயங்களைப் பற்றியும் அவர்கள் செய்த உதவிகளையும் எவ்வளவு கஸ்ரப்பட்டு எனக்கு அன்று அந்த உதவியை செய்தானே என்று அவர்கள் செய்யும் நன்மைகளை நன்றியுணர்வோடு அடிக்கடி மனதில் நினைவு கூறுவது அவர்களின் மேல் நாம் வைத்த அன்பு பாசத்தை மேலும் உயர்த்த முடியும்.

சிலவேளை நண்பர்கள் செய்யும் நல்ல காரியம் துரதிஸ்டவசமாக பிரச்சினையில் தீமையில் முடியும் பட்சத்தில் அந்தச் சம்பவங்களை அன்றுடனே மறப்பது நல்லது. அதைவிட்டு ஆயிரம் நன்மைகளைச் செய்து அடுத்த ஓர் சிறு தீமை ஏற்பட்டதுடன் அந்த ஆயிரம் நன்மைகளையுமே அந்தச் சிறு தீமையில் அடிபட்டு போகவிடும் மனப்பான்மை இருக்கக் கூடாது. தீமையை நினைத்து பழிவாங்கும் எண்ணத்தை எக்காரணம் கொண்டும் வளர்க்கக் கூடாது.

முடியுமான வரையில் நண்பர்கட்கு செய்யும் செலவுகளை வரவு வைப்பதும் அழகல்ல, இன்று நான் 50 ரூபாவுக்கு ஒரு பொருளை அன்பளிப்பு என்ற பெயரில் கொடுத்து விட்டு பின்பு அதையே இருமடங்காக பெறும் சந்தர்ப்பத்தை எதிர்பார்ப்பதும் உண்மை நட்பு அல்ல. தொடர்ச்சி பக்கம்: 44



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வடக்கில் பொருட்களின் விலைகள்

தற்போது வடக்கு மாகாணத்தில் நடைமுறையில் இருக்கும் விலைப்பட்டியல் பின்வருமாறு:-

| | |
|---|---|
| 1 கிலோ அரிசி | ரூபா 45 - 60 வரை |
| 1 கிலோ கோதுமை மா | ரூபா 32 - 40 வரை |
| 1 கிலோ சீனி | ரூபா 45 - 95 வரை |
| 1 கிலோ மைசூர் பருப்பு | ரூபா 80 - 95 வரை |
| 1 கிலோ மிளகாய் | ரூபா 105 - 120 வரை |
| 1 கிலோ பாண் | ரூபா 11 - 16 வரை |
| 1 கிலோ கொத்தமல்லி | ரூபா 75 - 95 வரை |
| 1 லீட்டர் மண்ணெண்ணெய் | ரூபா 100 - 300 வரை |
| 1 லீட்டர் டீசல் | ரூபா 120 - 150 வரை |
| 1 லீட்டர் பெற்றோல் | ரூபா 400 - 1000 வரை |
| 1 லீட்டர் தேங்காய் எண்ணெய் | ரூபா 40 - 140 வரை |
| குழந்தைகளின் பால்மா | ரூபா 95 - 150 வரை |
| 1 சண்லைட் சோப் | ரூபா 25 - 60 வரை |
| 1 பேக் சீமேந்து | ரூபா 600 - 1000 வரை |
| 1 பேக் உரம் | ரூபா 2000 - 2500 வரை |
| 1 தேங்காய் | ரூபா 20 - 40 வரை |
| 1 கிலோ கத்தரிக்காய் | ரூபா 45 - 60 வரை |
| 1 கிலோ கரட் | ரூபா 100 - 120 வரை |
| 1 கிலோ போஞ்சி | ரூபா 100 - 120 வரை |
| 50 கிலோ விறகு | ரூபா 150 - 200 வரை |
| 4 அவுன்ஸ் பூச்சிக்கொல்லி | ரூபா 120 - 190 வரை |
| 1 கிலோ மீன் (சராசரி) | ரூபா 90 - 150 வரை |
| 1 கிலோ இறைச்சி (சராசரி) | ரூபா 140 - 160 வரை |
| 1 பனடோல் வில்லை | ரூபா 1/75 - 2/50 வரை |
| ஒரு முறை வைத்திய ஆலோசனை செலவு | ரூபா 75 - 150 வரை |

மேற்படி விலைகளில் சிறிதளவு ஏற்ற இறக்கங்கள் ஏற்பட்டபோதும் சாரசரி நியாயமான விலைகளுக்கு பொருட்கள் கிடைப்பதில்லை. இந்த நிலைமையை கறுப்புச்சந்தைக்காரர்கள் தமக்கு சாதகமாக பயன் படுத்தி மக்களை பெரிதும் சுரண்டுகின்றனர். சில உணவுப்பொருட்கள் கிடைப்பதே இல்லை.

உணவு பஞ்சம் காரணமாகவும் மருத்துவ சிகிச்சை பெறமுடியாமை காரணமாகவும் பலர் இயற்கை மரண மடைவது அங்கு சாதாரண நிகழ்வுகளாகிவிட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கடிதங்கள்

சஞ்சீவி ஆசிரியர் குழுவிற்கு!

உங்கள் மலர் 15 கிடைக்கப் பெற்றது பெருமகிழ்ச்சி மலர் 15 உடன் இணைக்கப்பட்டுள்ள சிறுவர் மலர் சஞ்சீவியின் வளர்ச்சியில் புதியதொருமைல்கல்.

சஞ்சீவியை வெளியிடவே பல நடைமுறைச் சிக்கல்களும், செலவும் ஏற்படும் நேரத்தில் அத்துடன் "சிறுவர் மலரையும்" வெளியிடுவது என்பது மிகவும் சிரமம் என்பது எல்லோருக்கும் தெரியும். கொடுக்கும் பணத்திலும்பார்க்க சஞ்சீவி தரமானதாக வருவதும், "நடுநிலை"யாக எழுதுவது குறித்து பெருமகிழ்ச்சி அடையும் நான் சஞ்சீவிக்கு எனது வாழ்த்துக்கள் கூறி முடிக்கின்றேன்.

நட்புடன்
ம.புவேந்திரன்.

அன்புடன் ஆசிரியர் குழுவிற்கு.

இரண்டு மாதங்கள் இருபது நாட்கள் கழித்து மறுபடியும் ஒருமுறையாக சஞ்சீவி (மலர் 15 + சிறுவர் மலர்) என் கைகளில் கிடைத்தது. அடுத்த மலர் மூன்று மாதங்கள் முப்பது நாட்கள் கழித்துத் தான் வருமா? (v ஊர e



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

opmærksomhed!) OK தாமதமாக வந்தது சிறுவர் மலருடன் ஆனால் பெரியவர் மலரின் பக்கங்களைத் திருடியா அவர்களுக்கு கொடுக்க வேண்டும். (ம்... மறுப்போம் மன்னிப்போம் இம் முறை)

A. "தமிழ் படிச்சு எங்கட பிள்ளை என்ன செய்யப் போகுது."

B. "தமிழ் கதைக்கத் தெரிஞ்சால் போதும்."

C. "உந்த புன்னவேலை ரீச்சரிட்டையே என்ரை பிள்ளை தமிழ் படிக்கவேணும்."

இப்படியாக தம் பிள்ளைகளின் தமிழ் வளர்ச்சிக்கே தடை போடும் சில பெற்றோர்களின் மனதை மாற்றி, தம் பிள்ளைகளுக்கும் தமிழ் மொழியில் வளர்ச்சி தேவை என்பதை உணரவைக்க இது ஒரு திறமையான முறைதான், ஆனால் எத்தனை பேர் சஞ்சிகையை (விரும்பி) வாசிக்கிறார்கள்?

நோக்கில் 7ம் பக்கம் 3 ஆவது பந்தி என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டது. சும்மாவே டென்மார்க் வைத்தியத்தில் நம்மவர்களுக்கு நம்பிக்கையில்லை இப்போ இதை வாசித்ததும், 18/8 க்குப்பின் வைத்திய சாலைக்குப் போகும் எண்ணிக்கை குறைந்தாலும் குறைந்துவிடும். (இப்படியான வதந்திகளை கிளப்பி விடத்தான் வேண்டுமா.) டென்மார்க்கில் இருதயமாற்றுச் சிகிச்சை செய்த 20 பேரில் அறுவர் இறந்துவிட்டதாக அண்மையில் கேள்விப்பட்டோம். அறுவை சிகிச்சை செய்த இன்னும் ஒருவருக்கு இப்போ HIV positive இருப்பது பரவலாக செய்திகளில் அடிபட்டதை நீங்களும் கேட்டிருப்பீர்கள் அல்லது வாசித்திருப்பீர்கள். அவர்கள் இந்த நாட்டு மக்கள்தான் இப்படியான அசம்பாவிதங்கள் இந்நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல அகதிகளுக்கும் சில நேரங்களில் நேர்-

www.tamilarangam.net

ந்து விடுகிறது. அதற்காக நம்மை விலங்காக பாவிக்கிறார்கள் என்று கூறிவிட முடியாது தானே? அதே நேரம் இனத்துவேஷம் காரணமாக தமிழ் இளைஞன் ஒருவன், தாதி ஒருவரால் வைத்திய சாலையில் நிராகரிக்கப்பட்டு இறந்ததையும் எப்போதோ பத்திரிகையில் வாசித்ததாக ஞாபகம். (உண்மையோ பொய்யோ யாம் அறியோம் பராபரமே.)

"இந்திய இசையின் ஒரு துளி" தெளிவாக இருந்தது. ஆனால் அக்கட்டுரையை எழுத உதவிய குறிப்புகளை (kilder) கீழே குறிப்பிட்டிருந்தால் இன்னும் அழகாக இருந்திருக்கும். ஆயிரம் இசைத்துளிகள் இந்தியாவில் இருந்தாலும் இளையராஜாவின் "இசை மழை"யிலிருந்து வரும் இசைத்துளியில் நனைவதில் தான் எமக்கு பேரானந்தம்.

மற்றும் கவிதைகளுள் மீராவின் "காதல்" இனிமையாக இருந்தன.

வணக்கத்துடன்
லாயா.

---

வாசகர் லாயா அவர்கட்கும்,

அவரின் கருத்தை ஒத்த வாசகர்கட்கும் அறியத்தருகின்றோம். ஒரு சிறு உதாரணம்: அண்மையில் (கடந்த 9ம் மாதம்) நடந்த விடயம், Holstebro வைத்திய சாலைக்கு மகப்பேற்றுக்காகச் சென்ற இரு இளம் தமிழ்த்தாய்களின் அனுபவத்தைக் கூறுகின்றோம். இந்த தாய்களின் பிள்ளைப் பேற்று நாள் முடிவடைந்து விட்டதைப் பற்றி பல முறை வைத்தியரிடம் கூறியும் வைத்தியரின் கவனக்குறைவால் குழந்தைகள் முதல் நீரை (பன்னீர்) தாயின் வயிற்றினுள் அருந்தி, மூச்சுத் திணறி இறக்கும் தருணத்தில் சத்திர சிகிச்சை மூலம் ஒரு குழந்தையும், மற்றக் குழந்தை ஊசி போட்டும் பிறப்பித்து கண்ணாடிப் பெட்டியுள் வைத்து பிராணவாயு மருந்து என்பன கொடுத்து மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.

1.9ம் பக்கம் பார்க்கவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்பான என் சஞ்சீவியே!

நான் உன்னைக் கண்ட நாட்கள் பல, ஆனால் நான் உன்னை ருசித்த நேரம் சில என்றாலும் நான் உன்னை மறக்க மாட்டேன். என்னில் நீ ஏதும் குற்றம் குறை கண்டால் மன்னிக்கும்படி வேண்டி நிற்கின்றேன்.

மேலும் சஞ்சீவியே என்னைப் பொறுத்தவரையில் நீயோ தமிழர் மத்தியில் வளர்ந்து விட்டாய். இதில் உன்னை வளர்த்த வாசகர்களுக்கும், ஆசிரியர் குழுவுக்கும் எனது முதற்கண் நன்றிகள்.

ஆனால் நான் உன்னை ஒன்று கேட்பேன் ஆத்திரப்படாதே! உன் கரம் பிடித்து உன்னோடு வந்த புதிரைக் கண்டு என் கரங்களால் ஏந்தி தனிமையில் இனிமையாய் ருசித்தேன். அவ்வேளை நான் எனக்குள் எண்ணினேன். நான் ஏன் ஒரு சிறுவனாக இருக்கக் கூடாது என்று, ஆனால் என் தற்பெருமை என்னை விடவில்லை. நடந்து முடிந்ததை எண்ணுவது வீண். நடக்கப் போவதை நல்ல வழியில் நடத்துவதே மேல் என்று எனக்குள் உணர்ந்தேன். பின்பு சற்றுச் சிந்தித்தேன். எனக்கு உதவாவிடினும் எதிர் வரும் காலங்களில் வளர்ந்து வரும் சிறுவர்கள், சிறுமியர்களுக்கு உதவும் அல்லவா என்று....

அப்படி நீயும் எண்ணினால்! உன்னோடு உன்கரம் பிடித்துவரும் "சிறுவர் மலரை" ஒவ்வொரு முறையும் வளர்ந்து வரும் சிறுவர், சிறுமியர் தமிழ் என்னும் அமுதினை அவர்கள் தங்கள் நாவால் தெம்பி - கரிந்த துணையாய் உதவி புரிவாயா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்புச் சிறுவர்களே! நீங்கள் ஆயிரம் மொழிகளை உச்சரித்தாலும் தமிழ் என்றும் மொழியே தாய் மொழி என்று எண்ண மறந்து விடாதீர்கள்.

"சிறுவர் மலர்" ஒன்றில் வெளிவந்த "கயல்விழி யேசுரட்ணம்" என்ற சிறாரின் ஆக்கமும், சங்கீதா செல்லத்துரை என்ற சிறாரின் ஆக்கமும் இச் சிறுவர் மலரை மிகவும் இரசனைப்படுத்தியது.

மேலும் சில சிறார்களின் ஆக்கங்களும் என் மனதினை மிகவும் கவர்ந்தது. எமது தாய் நாட்டில் பிரச்சனைகளால் கல்வியினை நன்கு கற்கமுடியாத நிலைமையில் இங்கு வந்துள்ள குழந்தைகள் தமிழை நன்கு கற்று, திறமையும், சிறப்புமடைய எனது அன்பு கலந்த வாழ்த்துக்கள் பல "உங்கள் திறமைக்கு" என்ற கதைக்கு சரியான விடையைக் கண்டு பிடிக்கும் "திறமைசாலிக்கு நானும் ஓர் அன்பளிப்புப் பொருளை வழங்கக் காத்திருக்கிறேன்.

சுபம்.

கு. குருசு. HOLSTEBRO.

(17ம் பக்கத்தொடர்ச்சி)

இதை வீட்டில் வந்து பார்க்கும் தாதி சொல்லியும் வைத்தியரின் கவனக்குறைவால் நடந்தவை.

இவர்கள் தமிழ் அகதிகளை அறிவில் வயது குறைந்தவர்கள் எனவும், மனநோயாளிகள் என்றும் தமது வழமையின் அதி உன்னத கண்டுபிடிப்பின் காரணமாக இரண்டு தமிழ் குழந்தைகளை இழக்க வேண்டிய நிலைக்கு நாங்கள் மட்டுமல்ல, இந்த வாருவும் டெனிஷ் கீழ் தட்டு மக்களும் தள்ளப்பட்டு பாதிக்கப்படுவதும் நடைமுறையில் காணக்கூடியதாக உள்ளது. — சஞ்சீவி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்பான என் இனிய நண்பர்கட்கு,

நாங்கள் யார்? நாம் ஏன் இங்கு வந்தோம்? என்ற சில கேள்விகளை தமிழர்களாகிய நாம் ஒவ்வொருவரும் எங்களை நாங்களே கேட்டுக் கொள்ளக் கூடிய கேள்விகளாகும். எங்களில் பெரும்பாலானோர் நாட்டுப் பிரச்சினைகளைக் காரணம் காட்டி இங்கு அகதி அந்தஸ்த்து பெற்றிருக்கின்றோம். உலகத்திலேயே எந்த ஒரு நாட்டிலும் இல்லாத அளவிற்கு எங்களுக்கு இங்கு டெனிஸ் மக்களைப் போல் சமவுரிமை வழங்கி அவர்களை விட கூடுதலான சலுகைகளையும் இந்த நாட்டு அரசாங்கம் செய்தும் வருகின்றது. இதற்குப் பதிலாக எங்களிற் "சிலர்" குடித்துவிட்டோ அல்லது வேறு முறையில் போதைவஸ்த்துக்களைப் பாவித்து

# போதைவஸ்த்து அடிமைகளுக்கு

விட்டோ தங்களுக்குள்ளும் வேறு தமிழர்களோடும் சண்டை பிடித்து டெனிஸ் மக்களோடும் அடிபட்டுத் திரிகின்றார்கள்.

இந்த நிலை தான் ஏன்?

நாம் எமக்குக் கிடைத்துள்ள சுதந்திரத்தினை துஸ்பிரயோகம் செய்வதன் மூலமும் அல்லது எந்தவொரு தமிழனும் பொறுப்பில்லாத முறையில் தனக்கேற்ற முறையில் நடந்து கொண்டால் எமக்கு இச்சமுதாயத்தில் மற்றைய இன அகதிகளிற்குக் கிடைத்துள்ள அதே அந்தஸ்துத் தான் கிடைக்கும். உதாரணமாக சில வருடங்களுக்கு முன்னர் ஒரு தமிழனும் இன்னொரு வெளிநாட்டுக்காரனும் ஒரு தொழிற்சாலையில் வேலை கேட்டால் அங்கு தமிழனுக்கே முதலுரிமை கிடைத்தது. ஏன்..? இன்றும் கூட கிட்டத்தட்ட இதே நிலை, தான். ஆனால் எமக்கு மத்தியிலுள்ள

www.tamilarangam.net

சில தமிழர்கள் யோசனையற்ற முறையில் பொறுப்பில்லாமல் நடப்பதன் மூலம் எங்கள் எல்லோரையும் படுகுழியில் இழுத்து விடுகின்றனர். இங்கு உண்மையான ஒரு சம்பவத்தினைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

ஓர் இரவு சுமார் 11 மணியிருக்கும்.

இங்குள்ள வீதியொன்றில் இரு தமிழர்கள் குடித்து விட்டு சத்தம் போட்டுக் கொண்டு வந்தார்கள். அதே வழியில் வந்த இரண்டு டெனிஸ்க்காரரோடு அடிபடவும் முயற்சித்தார்கள். அந்த டெனிஸ்காரர்கள் தானாகவே நழுவிக் கொண்டார்கள். இவர்களது தொடர்ந்த பலத்த சத்தத்தினால் வீதியின் அருகே இருந்த வீட்டுக்காரர்கள் எட்டிப் பார்த்த போது அவர்களையும் இவர்கள் தமக்குத் தெரிந்த கொச்சைடெனிஸ் மொழியாலும் அரைகுறையாக தமிழாலும் ஏசிக் கொண்டே போனார்கள்.

இது என் கண் முன்னாலே நடந்த சம்பவம். இத்தகைய மனவருத்தத்தக்க செயற்பாடுகள் வளர்ந்து வரும் நிறவெறியை மேலும் வளர்க்கவும், இந்தச் சமுதாயத்தில் எங்களை ஆதரிக்கும் மக்களையும் எதிர்ப்பினை வளர்க்கவுமே உதவும். அந்நேரம் ஒன்றுமே தெரியாத அப்பாவித் தமிழர்களுக்கும் ஆபத்தை ஏற்படுத்தும்.

இன்று கூடுதலான ஐரோப்பிய நாடுகளில் கறுப்பு மயிருடைய வெளிநாட்டவருக்கு எதிர்ப்பு வளர்ந்து வருவதை யாரும் மறுத்து விடவோ மறந்துவிடவோ முடியாது. இதன் காரணமாகவே மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஒன்றாகச் சேர்ந்து ஒரு பொது அகதிச் சட்டத்தினை உருவாக்கியுள்ளன. இச்சட்டமானது நடைமுறைப்படுத்தப்பட்டால் நாமும் இலண்டன், கனடா, ஜேர்மனி போன்ற நாடுகளில் வாழும் தமிழர்களைப் போல் சுயவாழ்வுக்கே இரவு பகலாய் குடும்பம்

www.tamilarangam.net

குடும்பமாய் உழைக்க வேண்டிய நிலைமை வரும் என்பதில் சந்தேகமேயில்லை.

டென்மார்க்கில் டெனிஷ்க் காரர்களுக்குள்ள சகல உரிமைகளும் இந்த நாட்டு அகதிகளுக்கும் வழங்கப்பட்டிருக்கின்றபடியினால் நாம் அதனைச் சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும். டென்மார்க்கில் வாழும் தமிழர்களில் பெரும்பாலனோர் இளம் சமுதாயத்தினரே. இவர்களில் பெரும்பாலனோர் எந்தவிதப் படிப்புக்களும் இல்லாமல் போதைவஸ்துக்கு மாத்திரமே அடிமையாக இருப்பது மிகவும் கவலைக்குரிய ஒன்றாகும். டென்மார்க்கில் வாழும் அகதிகளில் தமிழர்கள் மாத்திரமே படிப்புத்துறையில் குறைந்த வீதத்தினையுடையவர்கள் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. இங்கு சாதாரண வேலை தொடக்கம் வைத்தியர் தொழில்நுட்பவியலாளர், என்ற வரிசையில் மேற்படிப்புக்களைத் தொடர்வதற்கான சகல வசதிகளும் இங்கு நிறையவேயுண்டு. உலகத்திலே வாழுகின்ற தமிழர்களுக்குள் டென்மார்க் வாழ் தமிழர்களுக்குக் கிடைத்திருக்கின்ற இந்த அரிய சந்தர்ப்பத்தை மற்றைய ஐரோப்பிய நாடுகளுக்குப் போய்வருவதன் மூலமும் தொடர்பு கொள்வதன் மூலமும் அறிந்து கொள்ள முடியும். ஆகவே தயவுசெய்து இந்த நல்ல சந்தர்ப்பத்தை நழுவவிடாது தகுந்த முறையில் பயன்படுத்தி, ஒரு நல்ல பிரகாசமான சமுதாயத்தை உருவாக்க நாம் எல்லோரும் சேர்ந்து உரமான அஸ்திவாரத்தினை அமைப்போமாக.

இதைவிட நாம் எவ்வளவு தான் எமது தாய்நாட்டிற்கப்பால் வாழ்ந்து வந்தாலும் எமது கலை, கலாச்சாரம், பண்பாடுகளை ஒரு போதும் மறந்துவிடக் கூடாது. இதன் அர்த்தம் நாம் இதில் முற்றாக எம்மை பின்னிப் பிணைக்க வேண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டும் என்பதல்ல. எமது சமுதாயத்திலுள்ள சில தீய விடயங்களை மறந்து (உ+ம் :- சாதிஅமைப்பு முறை) டெனிஸ் சமுதாயத்திலுள்ள சிறந்த விடயங்களை (உ+ம் :- சுயமாக தெளிவாகச் சிந்தித்தல்) நாம் கற்றுக் கொள்ள வேண்டும். டெனிஸ் சமுதாயத்தில் சுதந்திரம் உண்டு, என்பதால் அதனை நாம் பிழையான முறையில் விளங்கி படுகுழியில் வீழ்ந்து விடக் கூடாது. உ+மாக :- டெனிஸ் சமுதாயத்தில் நெருங்கிய குடும்ப உறவுகள் இல்லை. நெருங்கிய நண்பர்களில்லை. ஆனால் வெள்ளி சனி கிழமைகளில் சேர்ந்து கெக்குட்டங் குடிப்பார்கள் பின்பு மறைந்து விடுவார்கள். இப்படியாகப் பலவகையான உதாரணங்களைக் காணலாம். இவை போன்ற செயற்பாடுகள் எமது சமுதாயத்தில் தேவையில்லாத பிரயோசனமற்ற செயல்களாகும். நாம் இங்கு தனிமையாக இருப்பதை விட ஒற்றுமையாக இருப்பதே எமது சுகாதார நிலைக்கும் சிறந்ததாகும்.

டென்மார்க்கில் நிறையவே சுதந்திரமுண்டு. அதற்கொரு எல்லையும் உண்டு. அந்த எல்லை எது என்பதை நாங்கள் தான் அறிந்து கொள்ள வேண்டும். இதனை தெளிவான முறையில் அறியாதவர்களே பல தடவைகள் நீதிமன்றத்திற்கும் அதன் பின்னர் சிறைச் சாலைக்கும் சென்று வருகின்றனர்.

ஒவ்வொரு தமிழனது தனிப்பட்ட முறையிலான நடவடிக்கைகளும் சகல தமிழர்களினதும் எதிர்காலத்தினைத் தீர்மானிக்கும். ஆகவே போதைவஸ்து அடிமைகளே உங்களது இந்நோயால் அப்பாவியாகிய நாங்களும் பாதிக்கப்படுகின்றோம். உங்களிற்காகவும் மற்றவர்களுக்காகவும் சிறிது சிந்தியுங்கள்

சென்ற வருடம் ஜேர்மனியில் ஒரு அப்பாவித் தமிழ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அகிக அந்த நாட்டு இளைஞர்களால் ஆற்றில் தள்ளப்பட்டு கொலை செய்யப்பட்டான். சுவிஸ் நாட்டில் இரண்டாவது முறையாக அங்குள்ள அகதிமுகாம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளது. இந்த இழி நிலை இதுவரையிலும் டென்மார்க்கில் இடம்பெறவில்லை, இனிமேலும் வேண்டாம்.

கொஞ்சம் சிந்தியுங்கள்.

உங்களது நோயிற்கான வைத்திய உதவியினை என்னால் உங்களிற்குச் செய்ய முடியும். இது சம்பந்தமான கேள்விகளை சஞ்சீவிக்கு அனுப்பினால் அதற்கான பதில்களை என்னால் வழங்க முடியும்.

குடி குடியைக் கெடுக்கும் என்ற பழமொழியின் உண்மையினை நீங்கள் அனுபவ மூலம் கண்டுபிடிக்க முன்னர் நீங்களே உங்களுக்கு உதவி செய்வீர்களாக.

இப்படிக்கு
உங்கள் அன்பின்
பொன். மகேஸ்வரன்

## வாசகர், ஆக்கதாரர்கட்கு :

சஞ்சீவிக்கு முகவரியற்ற சில ஆக்கங்கள் கிடைத்துள்ளன. முகவரியுடன் வரும் ஆக்கங்கள் மட்டுமே இதழில், தரம்பார்த்து வெளியிடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

- சஞ்சீவி -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஓண்ட வந்த பிடாரியே, ஈழத் தமிழரை விரட்டாதே!

''தான் சார்ந்திருக்கும் இனம், மதம் அல்லது சமூகக் குழுவின் காரணமாகவோ, தான் கொண்டிருக்கும் அரசியல் கருத்தின் காரணமாகவோ, தனது உயிருக்கும், சுதந்திரத்திற்கும் அபாயம் நேரக்கூடும் என்றால் அந்த அகதியை, தஞ்சமளித்த அரசு வெளியேற்றவோ, அத்தகைய அபாயம் உள்ள அவரது நாட்டுக்குத் திருப்பி அனுப்பவோ கூடாது''

— அகதிகள் குறித்த ஐ.நா.வின் ஜெனிவா மாநாட்டுத் தீர்மானம் எண் *33* - *1* ஜூலை *1951*

அகதி ஒருவருக்குத் தஞ்சமளித்த நாடு அவரைத் திருப்பியனுப்பியே தீர வேண்டும் என்றால் அதற்கு ஒரு நிபந்தனை விதிக்கிறது ஐ.நா. தீர்மானம். தஞ்சம் புகுந்த நாட்டில் அந்த அகதி பாரதூரமான குற்றமிழைத்திருந்தாலோ, தஞ்சம் புகுந்த நாட்டின் பாதுகாப்பிற்கே அபாயம் விளைவித்தாலோ அவரை வெளியேற்றலாம். ஆனால், இந்தக் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு நாட்டின் அதி உயர் நீதிமன்றம் அவர்கள் குற்றவாளிகள் என்று தீர்ப்பு வழங்கியிருக்க வேண்டும்.

மனித உரிமைகள் குறித்த ஐ.நாவின் தீர்மானத்தையும், அகதிகள் பிரச்சினை பற்றிய தீர்மானங்களையும் இந்தியாவும் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அவற்றை மதிப்பது, அமல்படுத்துவதும் இந்திய அரசின் கடமை, பொறுப்பு.

ஆனால், தி.மு.க. ஆட்சியைக் கவிழ்ப்பதற்காகவும், பின்னர் தேர்தலில் ஓட்டுப் பொறுக்குவதற்காகவும் வாழப்பாடி - ஜெயலலிதா கும்பல் பேசிவரும் பேச்சுக்களும் எடுத்துவரும் நடவடிக்கைகளும் ஐ.நா. தீர்மானங்களுக்கும், சர்வதேச மரபுகளுக்கும் நேரெதிராகவே உள்ளன. ''ஈழ அகதிகளை விருப்பப்பட்டால் முகாம்களில் அடைத்து வைக்கலாம். அல்லது வங்காள விரிகுடாவில் விசிறியடிக்கலாம்'' என்பதே அகதிகள் விஷயத்தில் இக்கும்பல் வைக்கும்

## ஈழத்தமிழரை விரட்டாதே! அரங்குக் கூட்டம்

ஈழத் தமிழ் அகதிகளை வெளியேற்றாதே என்ற தலைப்பில் மக்கள் கலை இலக்கியக் கழகம் தமிழ்நாடு முழுவதும் கருத்தரங்கக் கூட்டங்களை நடத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக திருச்சி ஜாபர்ஷா தெரு - ஜெயின் பவனில் 10.7.91 அன்று கூட்டம் நடைபெற்றது. தோழர் தமிழ்மணி தலைமையில் தோழர் கதிரவன் உரை நிகழ்த்தினார். ஈழத்தமிழ் அகதிகளை வைத்து பிழைப்பு நடத்திய ஓட்டுக் கட்சிகள் இன்று ஜெயலலிதா - வாழப்பாடி கும்பலின் அகதிகளை வெளியேற்றும் நடவடிக்கையைப் பற்றி வாயே திறக்காத கோழைத்தனத்தை அம்பலப்படுத்தினார். மேலும் அகதிகளை வெளியேற்றுவது ஐ.நா. தீர்மான விதிமுறைக்குப் புறம்பானது என்பதை விளக்கியும், ஈழ அகதிகளுக்கு இங்கு தங்கவும் பிரச்சாரம் செய்யவும் முழு உரிமையுண்டு. இதை அமல்படுத்த ஜனநாயக - டாட்சிகர சக்திகள் முன்வர வேண்டும் என அறைகூவல் விடுத்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அணுகுமுறை

ராஜீவ் கொலையுண்டானவுடனே ஈழத்தமிழ் அகதிகள் அனைவரையும் இலங்கைக்கே திருப்பி அனுப்பிவிட வேண்டுமென்று வாழப்பாடி, ஜெயலலிதா இருவருமே அறிக்கை விட்டனர். ஆனால், ஆட்சிக்கு வந்தபின் அகில இந்திய வானொலிக்கு அளித்த பேட்டியில் ''புலிகளை வெளியேற்றுவோம்; சட்டத்தை மீறுபவர்களை வெளியேற்றுவோம்; டெலோ, ஈ.பி. ஆர்.எல்.எஃப் போன்ற குழுக்களை கருணையுடன் நடத்துவோம்'' என்று கூறினார் ஜெயலலிதா. தமிழகத்திலிருந்து வெளியேற்றுபவர்களை எங்கே அனுப்புவீர்கள் என்று நிருபர்கள் கேட்டதற்கு ''அதை முடிவு செய்வது மத்திய அரசின் வேலை'' என்று நழுவிக் கொண்டார்.

அகதிகள் பல்வேறு முகாம்களிலும், முகாம்களுக்கு வெளியிலுமாக சிதறி இருப்பதனால் அவர்களை கண்காணிக்க இயலவில்லை என்றும், எல்லா அகதிகளையும் தமிழகக் கடலோரத்தில் மூன்று பெரும் முகாம்களை அமைத்து அவற்றில் அடைத்துவிட்டால் கண்காணிப்பது சுலபம் என்றும் கூறுகிறார் ப.சிதம்பரம்.

வாழப்பாடி, சிதம்பரம், ஜெயலலிதா ஆகியோரின் கருத்துக்கள் வெவ்வேறு போலத் தோன்றினாலும் இவர்கள் அனைவரின் நோக்கம் ஒன்றே - அது ஈழ அகதிகள் அனைவரையும் வெளியேற்றுவதுதான்.

இந்த நடவடிக்கைகளுக்கு ஆதாரவாகப் பொதுக்கருத்தை உருவாக்குவதற்கு தமிழகத்தின் தரகு முதலாளித்துவ, பார்ப்பனப் பத்திரிகைகள் துணை நிற்கின்றன. ஈழ அகதிகள் அனைவரின்மீதும் பொய்களையும் அவதூறுகளையும் பரப்புகின்றன. உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைத்த துரோகிகளாக அவர்கள் சித்தரிக்கப்படுகின்றனர்.

ராஜீவ், 'கொலைக்குப்' பின் அகதி முகாம்கள் சிறைக்கூடங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. முகாம்களிலிருந்து அகதிகள் வெளியே செல்ல அனுமதிக்கப்படுவதில்லை என்பதுடன் பார்வையாளர்களும் முகாம்களுக்குள்ளே அனுமதிக்கப்படுவதில்லை. முகாம்களுக்கு வெளியில் உள்ள அகதிகளின் உறவினர்களோ, நண்பர்களோ தலைவரின் அனுமதி பெற வேண்டும் என்றும், பிறகு அந்த அனுமதிச் சீட்டுடன் வந்தால் சம்பந்தப்பட்ட அகதியை முகாமின் வாயிலுக்கு அழைத்து அங்கே போலீசின் பார்வையில் 30 நிமிடங்கள் பேசலாம் என்றும் கெடுபிடிகள் தீவிரமாக்கப் பட்டுள்ளன. ஐ.நா. உத்திரவாதம் செய்துள்ள அகதிகளின் பேச்சுரிமை, எழுத்துரிமை, நடமாட்ட உரிமை ஆகிய அனைத்துமே மறுக்கப்பட்டு அகதிகள் சிறைக் கைதிகளைப் போல நடத்தப்படுகின்றனர்.

புலிகள் ராஜீவைக் கொலை செய்திருக்கக் கூடும் என்பது மட்டுமே இவையனைத்திற்கும் காரணம் அல்ல; சோற்றுக்கு விலையாக சுதந்திரத்தைக் கேட்டபோது ஈழ மக்கள் அதை ஏற்காததே அனைத்திற்கும் மூல காரணம். இந்தியாவின் தெற்காசிய பிராந்திய விரிவாக்க நோக்கத்தை விரிவு செய்வதற்காக ராஜீவால் போடப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் தோல்வியும், அமைதிப்படையின் அவமானகரமான தோல்வியுமே ஈழமக்கள் மீது காங். - அ.தி.மு.க. கும்பலும், அதிகார வர்க்கமும் கொண்டிருக்கும் வெறுப்புக்குக் காரணம்.

தமது நாட்டில் தமது இனம் அல்லது தாம் கொண்டிருக்கும் அரசியல் கொள்கை காரணமாக அரசு அடக்குமுறையைச் சந்திக்கும் மக்கள் வேறுநாடுகளில் அரசியல் தஞ்சம் புகுவதும், அங்கே இருந்தபடியே தனது நாட்டின் விடுதலைக்காகப் போராடுவதும் உலக அரசியலரங்கில் அதிசயமானவை அல்ல.

பாகிஸ்தானின் ராணுவ ஆட்சிக்கெதிராக வங்காளதேசத்து மக்கள் போராடிய போது ஈழ அகதிகளைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமான அகதிகள் மேற்கு வங்கத்திலும், அஸ்ஸாமிலும் தஞ்சம் புகுந்தனர். அந்த அகதிகளை வங்காள தேசத்திற்கே திருப்பி அனுப்புமாறு பாகிஸ்தான் கூறிய போது ஐ.நா. தீர்மானங்களைக் காட்டி அவர்களுக்கு இந்தியாவில் தஞ்சமளித்ததுடன் ஒரு ஆக்கிரமிப்பு யுத்தம் நடத்தி, வங்காள தேசத்தில் முஜிபுர் ரகுமானின் தலைமையில் தனது கைப்பாவை ஆட்சியை உருவாக்கியது இந்திரா அரசு. பல லட்சக்கணக்கில் குடிபெயர்ந்த அகதிகளைப் பராமரிக்க நாடு முழுவதும் நிதிதிரட்டியது. பாகிஸ்தானிலிருந்து வங்காள தேசம் பிரிந்த பின்னரும் தஞ்சம் புகுந்த அகதிகளில் ஒரு பிரிவினரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அஸ்ஸாமிலேயே நிரந்தரமாகக் குடிய மர்த்தி அவர்களைத் தனது ஓட்டு வங்கியாக்கிக் கொண்டது இந்திராவின் காங்கிரசு அரசு.

வங்காள தேச அரசைத் தன் கட்டுப்பாட்டில் வைப்பதற்கென்றே அங்குள்ள சக்மா பழங்குடியினருக்கு ஆயுதப் பயிற்சியளித்து அவர்களை வங்காள தேச அரசுக்கும், வட கிழக்கிந்திய தேசிய இனப் போராளிகளுக்கும் எதிராகத் தூண்டிவிட்டது ராஜீவ் அரசு. பிறகு இந்திய அரசால் நிர்க்கதியாக விடப்பட்ட சக்மா அகதிகள் இன்று ஏறத்தாழ நாடற்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டனர்.


திபெத்திய மக்களால் விரட்டப்பட்ட தலாய்லாமாவுக்கும் அவரது விசுவாசிகளுக்கும் இந்தியாவில் அரசியல் தஞ்சமளித்ததுடன் இந்திய மண்ணில் ஒரு பகுதியை அவர்களுக்கு ஒதுக்கித் தந்து அங்கே லாமாவின் சுதந்திர திபெத் அரசு செயல்படவும் வழிவகை செய்தது இந்திய அரசு. திபெத்தை சீனத்தின் ஒரு பகுதியாக அங்கீகரித்துக் கொண்டே இந்திய அரசு செய்யும் இந்த அரசியல் மோசடி இன்றளவும் தொடர்கிறது.

1983 இல் ஜூலைப் படுகொலையை யொட்டி ஆயிரக்கணக்கான ஈழ மக்கள் தமிழகத்தில் தஞ்சம் புகுந்தபோது அவர்களைத் திருப்பி அனுப்புமாறு கோரினார் ஜெயவர்த்தனா. தனது மேலாதிக்க நோக்கத்துக்கு ஈழத் தமிழர் பிரச்சனையைப் பயன்படுத்தத் திட்டம் தீட்டிய இந்திரா, அகதிகளைத் திருப்பியனுப்பவியலாது என்று மிகப்பெரிய மனிதாபிமானியைப் போல் பேசினார்.

போராளிகளைத் தங்களது கையாட்களாகவும், தமிழர்களைப் பகடைக்காய்களாகவும் பயன்படுத்தி இலங்கையின் ஒற்றுமையைத் தனது தயவின்கீழ் கொண்டுவர முனைந்த இந்திய ஆளும் வர்க்கங்கள் தங்களது கனவு நிறைவேறாததனால் ஆத்திரம் கொண்டுள்ளனர். அகதிகளை வெளியேற்றும் தங்கள் முடிவுக்கு ஆதரவு திரட்ட ராஜீவின் கொலையை ஒரு முகாந்திரமாகப் பயன்படுத்துகின்றனர்.

### வெளியேற்றினால் என்ன நேரிடும்?

ஈழ மக்களை இங்கிருந்து வெளியேற்றுவது என்பது அவர்கள் அனைவருக்கும் மரண தண்டனை நிறைவேற்றுவதற்கு ஒப்பானது. சிங்கள ராணுவத்திற்கும் புலிகளுக்குமிடையிலான போரில் தமிழ் சிவிலியன்




இலங்கையின் தமிழ்ப்பகுதிகளிலுள்ள அகதி முகாம்கள் இவை. இங்கிருக்கும் அகதிகளையும் அங்கு விரட்டினால் அவர்கள் நிலை?

நன்றி: தூண்டில் (ஜெர்மனியிலிருந்து வெளியாகும் ஈழத்தமிழ் இதழ்)

www.tamilarangam.net

கள் கொல்லப்படுவதும் சித்திரவதைக்குள்ளாவதும் தொடர்கிறது. சமீபத்தில் கிழக்கு மாகாணம் கொக்கடிச் சோலையில் ஒரு கிராமம் முழுவதையும் சிங்கள இனவெறி ராணுவம் படுகொலை செய்துள்ளது. இதை மறைக்கவோ, நியாயப்படுத்தவோ இயலாத பிரேமதாசா அரசு இச்சம்பவம் குறித்து விசாரணைக்கு உத்திரவிட வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது.

அகதி முகாம்களில் ஒளிந்துள்ள புலிகள்மீது தாக்குதல் தொடுக்கப் போவதாகவும், எனவே முகாம்களை விட்டு அகதிகளனைவரும் வெளியேற வேண்டும் என்றும் சிங்கள ராணுவம் கொடுத்த உத்தரவை கிறித்தவப் பாதிரியார்கள் எதிர்த்துள்ளனர். ''பல நாட்கள் சுத்தம் செய்யப் படாத மலக்கூடம் ஒன்றினுள் நுழைவதைப் போல இருந்தது'' என்று அகதிமுகாம்களின் அவலநிலை பற்றிக் குறிப்பிடுகிறார், ஒரு கிழக்குப் பகுதி பத்திரிக்கை நிருபர். ''இத்தனை அவலங்கள் நிறைந்த அகதி முகாமை நான் என் வாழ் நாளில் பார்த்ததில்லை'' என்கிறார் மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு இலங்கை அரசு அதிகாரி.

ஜெயலலிதா - வாழப்பாடி கும்பலோ ஈழ மக்களை சிங்கள அரசின் அகதி முகாம்களுக்கு அனுப்பி வைக்கத் திட்டம் போடுகின்றன. அவ்வாறு அகதிகள் வெளியேற்றப்பட்டால் அவர்கள் பசியாலும், நோயாலும் மடிவார்கள் என்பது மட்டுமல்ல, பல ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டு வெளிக்கடை, பூசா முகாம்களை நினைவு படுத்தும் வகையில் சித்திரவதை செய்து கொல்லப்படுவர்.

சிங்கள இனவெறி அரசின் பாசிச அடக்கு முறைகளுடன், புலிகளை ஆதரிக்காத சக்திகள் அவர்களது அடக்குமுறைக்கும், கட்டாய வசூலுக்கும் ஆளாக வேண்டி வரும்.

### உணவு எரிபொருள் ''கடத்தல்'' தவறா?

தமிழகக் கடற்கரையிலிருந்து உணவும், டீசல்-மண்ணெண்ணெய் போன்ற எரிபொருட்களும் ஈழத்துக்குக் கொண்டு செல்லப்படுவதுபோல வாழப்பாடி - ஜெயலலிதா கும்பல் கூச்சல் போடுகிறது. பாசிச பிரேமதாசர் அரசின் முற்றுகையினால் அத்தியாவசியப் பண்டங்களின் போக்குவரத்து முற்றிலும் தடுக்கப்பட்டு அரிசி கிலோ 100 ரூபாய், சர்க்கரை கிலோ 100 ரூபாய், மண்ணெண்ணெய் லிட்டர் 150 ரூபாய், பெட்ரோல் லிட்டர் 650 ரூபாய் என்று பொருட்களின் விலை நினைத்தும் பார்க்க முடியாத அளவுக்கு ஈழத்தில் உயர்ந்திருக்கிறது. தொலைபேசி, செய்தித்தாள், மின்சாரம் வானொலி, அஞ்சல் போக்குவரத்து, மருந்து ஆகிய எதுவுமே இன்றி கடுமையான யுத்தத்தினூடே மக்கள் உயிர்வாழ போராடிக் கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் தமிழகக் கடற்கரையில் காவலை பலப்படுத்தி கடத்தலைத் தடுத்து விட்டதாக மார்தட்டுகிறது தமிழக அரசு. கிழக்கு - மேற்குக் கடற்கரைகளின் கடத்தல் சாம்ராச்சியத்தையும், பாகிஸ்தான் - நேபாள எல்லையில் எல்லைப் பாதுகாப்புப் படையின் கூட்டுடன் நடக்கும் கடத்தலையும் தடுக்க முடியாத அரசு அவற்றில் நூற்றிலொரு பங்குக்கும் காணாத புலிகளின் 'கடத்தல்' பற்றி கவலைப்படுகிறது. கடத்தல் காரர்களுடன் கூட்டு வைத்த காலம்போய் கோவா காங்கிரஸ் முதல்வரின் குடும்பமே கடத்தல் தொழிலில் சம்பந்தப்பட்டிருப்பது வெளிவந்து சந்தி சிரிக்கும்போது, கடத்தல் பற்றிப் பேச இவர்களுக்கு ஏது அருகதை?

இந்திய அமைதிப்படைக்குச் சோறு போட தமிழகத்திலிருந்து உணவுப் பொருட்களை இந்திய அரசு கடத்தியதால் தமிழகம் கடும் விலை உயர்வை சந்திக்கவில்லையா? ஈழத்திலிருந்து திரும்பிய 'சிப்பாய்கள்' கடத்திக் கொண்டு வந்த எலக்ட்ரானிக் பொருட்களை வரியின்றி அனுமதிக்கவில்லையா? இப்போது மட்டும் கடத்தல்பற்றி என்ன அதீத அக்கறை?

கடத்தலையும், புலிகளின் போக்குவரத்தையும் தடுப்பதற்காக இந்திய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் அவர்கள் கூறுவது போல இந்தியாவின் எல்லையைக் காப்பதற்கு அல்ல; மாறாக புலிகளுக்கும், ஈழ மக்களுக்கும் எதிரான போரில் சிங்கள ராணுவத்தின் தரப்பில் நின்று அவர்களது முற்றுகைக்கும், படுகொலைக்கும் உதவும் நடவடிக்கைகளே. வேறு வகையில் சொன்னால் ஈழத் தமிழருக்கு எதிராக மீண்டும் இந்திய அரசு போர் தொடுத்துள்ளது.

போராளிகளைக் களையெடுக்கும் நடவடிக்கைக்காக 'தமிழகத்தில் சட்டம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒழுங்கு சீர்குலைவு', 'ஆயுதக் கலாச்சாரம்' என்றெல்லாம் இந்திய அரசு பேசுவது நகைப்பிற்குரிய மோசடி. தமிழகத்தில் முகாம்கள் அமைத்து இந்திய உளவுப்படை 'ரா' போராளிகளுக்குப் பயிற்சியும் ஆயுதமும் அளித்ததும், போதை மருத்துக் கடத்தலை ஊக்குவித்ததும், எம்.ஜி.ஆர் பகிரங்கமாகக் கொடுத்த 4 கோடி ரூபாய் நன்கொடையையும், புலிகளுடன் ராஜீவ் நடத்திய ரகசிய பேரங்களும் ஏற்கனவே அம்பலமாகி உலகமறிந்த உண்மைகள்.

போராளிகளின் சமூக விரோத நடவடிக்கைகள் பற்றிப் பொதுவாக பேசும் தமிழக அரசு, போதை மருந்த கடத்தல், கொள்ளை போன்ற நடவடிக்கைகளில் ஈடு

காங்கிரசு - அதிமுக கும்பலுக்கு அருகதை இல்லை. பீகாரின் சாதிப்படுகொலை, உத்தரப்பிரதேசத்தில் பாரதிய ஜனதா நடத்திய கொலைவெறியாட்டம், பெரு நகரங்களில் நீக்கமறப் பரவி வரும் மா∴பியா கும்பல்களின் ஆதிக்கம் - இவற்றுக் கெல்லாம் என்ன தீர்வு? தமிழகத்தில் சட்டம் ஒழுங்கைக்க காப்பாற்ற போராளிகளை வெளியேற்ற வேண்டும் என்றால் மேற்சொன்ன நிலமைகளுக்காக, யாரை வெளியேற்றுவது?

'83 இல் தமிழகத்தில் எழுந்த ஈழ ஆதரவு அலை ஏழே ஆண்டுகளில் ஈழ எதிர்ப்பு அலையாக மாறியிருக்கிறதென்றால் அதற்குக் காரணம் ஈழப் போராட்டத்தை தனது நோக்கத்துக்குத் திசை திருப்ப முயன்ற இந்



உயிர் பிழைக்கக் கடல்கடந்து ஓடிவரும் அகதிகளை மீண்டும் கொலையாளிகளிடமே ஒப்படைக்க முயல்கிறது இந்திய அரசு.

பட்ட நபர்களைப் பற்றிய விவரங்களை மட்டும் திட்டமிட்டே மறைக்கிறது. அவற்றை வெளியிட்டால் இன்று எந்தக் குழுக்களை ஜெயலலிதா கருணையுடன் நடத்துவதாகக் கூறுகிறாரோ, அந்தத் துரோகக் குழுக்கள் தான் இத்தகைய குற்றங்களில் பெரிதும் ஈடுபட்டிருந்தவை என்ற உண்மை தெரியவரும்.

சட்டம் - ஒழுங்கு சீர்குலைவு குறித்தும் ஆயுதக் கலாச்சாரம் குறித்தும் பேசுவதற்கு

திய அரசின் சதியும், ஈழப் போராளிகள் அதற்குப் பலியானதும்தான். இது ஈழத்தின் எதிரிகளுக்கும் சிங்கள இனவெறியர்களுக்கும் கிடைத்துள்ள வெற்றி. தமிழின விரோதி சோ, உளவு அதிகாரி மோகன்தாஸ், ஈழ எதிர்ப்புப் பார்ப்பனப் பத்திரிக்கைகள் ஆகியோருக்குக் கிடைத்துள்ள வெற்றி.

ஈழ ஆதரவு அலை ஓங்கியிருந்த நேரத்திலும், எதிர்ப்புகள் இல்லாத நேரத்திலும் சவடாலடித்த தி.மு.க, தி.க. நெடுமாறன் மற்

(தொடர்ச்சி பக்கம் 33) 

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆச்சிக்கும் பிரச்சனை எனக்கும்...

அன்னிய வாழ்க்கை
அறுசுவை உணவுகள்
ஆனந்தப் பேச்சுக்கள்

அந்நிய மேகங்கள்
அந்நிய மோகங்கள்
அஜீரணக் கோளாறுகள்

ஆயிரம் வெள்ளிகள்
ஆள் தெரியாத இருட்டு
ஆழ் கடலில்
அமிழ்கிறேன், எழுகிறேன்
ஆதரவு யாரும் இல்லை

ஆரோ ஒருவர் ஆராரோ பாடுகிறார்
ஆரும் உறங்கவில்லை

அன்னிய வாழ்க்கை
ஆச்சிக்கு
அஜீரணம் ஆகவில்லை.
எங்கள்
அந்நிய வேகம்
ஆச்சிக்கு
அகப்படவில்லை

தாச்சிக்கும் எனக்கும் தீராது.
தாச்சி மறிப்பு!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆச்சி
இப்பத்தான் ஊராலை வந்தவ
அவ சொல்லுறா..
இப்ப நடக்கிற அழிவுகளும்,
ஆள் பலிகளும்.. அப்பப்பா... அப்பப்பா..
ஆரும் கேட்கிறதுக்கு இல்லை!!

ஆயுள் பயத்தில் ஆருமே
அருளுவதில்லை... அருளுவதில்லை!!
ஆப்பு இடுக்குக்குள் அகப்பட்டவர்கள்
அப்பாவிச்சனங்கள், அப்பாவிச்சனங்கள்.
அவவின்ரை
அங்கலாய்ப்பு ஆறவில்லை, ஆறவில்லை....

அவ சினக்கிறா, சலிக்கிறா
அங்கை இருக்கையிக்கை
இருந்த சுதந்திரம்
இங்கை இல்லையாம்.

அதைக் காவுக்கும், இதை கையுக்கும்
என்றும் ஒன்றை கழுத்துக்கும்
அடுக்கச் சொல்லுறியள்
இவையோ...... எனக்கு
எங்கை போனாலும் நிம்மதி இல்லை
இனி அங்கை!! போனால்த்தான் நிம்மதி!!

ஆச்சியை.. சுகம் விசாரிக்க வந்தவை/
"ஏன் தம்பி சிந்திசனுக்கு
எழுதவில்லையே"
என்டெல்லை கேட்கினம்
ஆனந்தமான அலட்டல் தான்!!

www.tamilarangam.net

ஆழ் மனதில் உள்ளதை
ஆருடன் பேசுவது!!

இருப்பவரும்
அன்னிய வெளியில்
எதையோ தேடி
இடறியடித்து ஓடுகிறோம்!

ஆயிரம் வெள்ளிகள்
ஆள் தெரியாத இருட்டு
ஆழ் கடலில்
அமிழ்கிறேன், எழுகிறேன்.

வளவன்.

---

நாம் வழிநடத்தும் புதிய சித்தாந்தம் இந் நாட்டு மக்களின் வாழ்வில் உண்மையான மறுமலர்ச்சியை ஏற்படுத்துகின்றது. வாழ்க்கைப் பாதையில் அடித்தளத்தில் தள்ளப்பட்ட நிலையில் சிரமப்பட்டுக்கொண்டிருக்கும் இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வில் ஒரு அடிப்படை மாற்றம் ஏற்பட்டு சகலரும் ஏழ்மை நிலையிலிருந்து விடுபட்டு வாழும் ஒரு சகாப்தத்தையே நாம் உருவாக்கி இருக்கிறோம்.
(ஐ.தே.க. பொதுக்கூட்டத்தில் பிரேமதாச) தொடர். பக்:56

---

# அபாய அறிவிப்பு

இலங்கை அரசு அடுத்த நிதியாண்டிற்கான செலவீனத்தில் வடக்கு கிழக்கு யுத்தத்திற்காக இரண்டாயிரத்துஐநூறு கோடி ரூபாயினை ஒதுக்கியுள்ளது.

www.tamilarangam.net



றும் ஈழ ஆதரவு குழுக்களின் தலைமைகள் இன்றைய நெருக்கடியான தருணத்தில் அஞ்சி ஒளிவது அவமானகரமானது. ராஜீவ் கொலையைக் காரணம் காட்டி புலிக ளையும், இந்திய ஆதிக்க எதிர்ப்பாளர்களை யும் நாடு கடத்த தமிழக அரசு முனைவதை இவர்கள் மவுனமாக வேடிக்கை பார்ப்பது வெட்கக் கேடானது.


### போராளிகளுக்கும் அரசியல் உரிமை வேண்டும்

'84-இல் இந்திராவின் கொலையை யொட்டி சீக்கிய வேட்டையும், சீக்கிய எதிர்ப்பும் தூண்டி விடப்பட்டது போல ராஜீவ் கொலையைக் காரணம் காட்டி ஈழ மக்கள் அனைவரின் மீதும் துவேசத்தைத் தூண்டும் முயற்சி நடக்கிறது. ராஜீவ் கொலையைப் புலிகள்தான் செய்தனர் என்று புலனாய்வுத்துறை அறுதியிட்டுக் கூறாத போதே, விசாரணை முடிந்து தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன்பாகவே ஊகத் தின் அடிப்படையிலேயே ஒரு இனத்துக்கு எதிராகப் பாசிச வெறியைத் தூண்டிவிடு வதை நாம் சகித்துக் கொள்ள முடியாது.

ராஜீவ் எப்படி, யாரால் கொலை செய் யப்பட்டார் என்று ஆய்வு நடந்தேயொ ழிய, கொலைக்கான நோக்கம் (Motive) பற்றி புலனாய்வுத்துறை கிடக்கட்டும், பத்தி ரிகைகள் கூடப் பேச மறுக்கின்றன. இவர்க ளது குற்றவியல் சட்டப்படியேகூட கொலைக்கான நோக்கத்தையும் இவர்கள் நிரூபித்தாக வேண்டும்.

ராஜீவின் கொலை குறித்து விசாரணை நடத்தும் அரசு, இந்திய ராணுவம் இலங்கை யில் நடத்திய சிவிலியன் கொலைகள், கற்ப ழிப்புகள், கொள்ளைகள் குறித்தும் விசா ரணை நடத்தட்டும். இத்தகைய விசாரணை யொன்றைக் கோரும் உரிமை நமக்கு உண்டு.

அமைதிப்படை என்ற பெயரில் இந் திய ஆக்கிரமிப்பு ராணுவத்தை அனுப்பி ஈழ மக்களை அவர்களது சொந்த மண்ணில் அடி





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மைப்படுத்த முயன்று தோற்ற இந்திய அரசு தனது நோக்கத்தை இந்தியாவில் நிறைவேற்றிக் கொண்டது. ஈழப் போராட்டத்துக்கு ஆதரவாக அரசியல் பிரச்சாரம் செய்யும் உரிமையும், சட்டபூர்வமாக இயங்கும் உரிமையும் உலக நாடுகள் அனைத்தும் வழங்கி இருக்கும்போது அவ்வுரிமைகள் இந்தியாவில் மட்டும் பறிக்கப்பட்டன. ஈழ அகதிகளின் சட்டபூர்வ உரிமைகளையெல்லாம் பறித்துவிட்டு இன்று சட்டபூர்வமாக அவர்கள் இயங்க அனுமதிக்கப்பட்டிருப்பது போலவும் சட்டவிரோத நடவடிக்கைகளைத்தான் தாங்கள் கட்டுப்படுத்த முயல்வதாகவும் இந்திய அரசு நாடகமாடுகிறது.

''புலிகளைத்தான் நாங்கள் வெளியேற்ற முனைகிறோம்; அகதிகளை அல்ல'' என்று சமீபத்தில் ஜெயலலிதா பேசியிருப்பது நயவஞ்சகமானது. போராளிகளும் அரசியல் தஞ்சம் புகுந்த அகதிகள்தான். தஞ்சம் புகுந்த இடத்தில் இருந்து கொண்டு அவர்கள் தங்கள் லட்சியத்துக்கான போராட்டத்தில் ஈடுபடுவதைத் தடுக்க முயலும் சதி தான், அகதி வேறு - போராளி வேறு என்று வகைப்படுத்தும் தந்திரம்.

தனது அரசியல் உரிமையை அடகு வைத்துவிட்டு அடிமைத்தனத்தை சகித்துக் கொண்டு முகாமில் அடைபட்டுக் கிடக்க தயாராக இருப்பவர்களுக்கு மட்டுமே தங்க அனுமதி என்கிறது ஜெயலலிதா அரசு. ஈழ மக்களின் உரிமையை மீட்டுத்தரப் போராடுவது நம் கடமை.

● அஜித்

நன்றி. புதிய ஜனநாயகம்
16-31 ஜூலை 1991.

---

**1983**ற்கு பின் ஈழப்பிரச்சனை உக்கிரமடைந்தது. அன்று இந்திய தமிழ் மக்கள் தமது தார்மீக ஆதரவை இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கினர். அன்றிலிருந்து தமிழ்ச்சஞ்சிகைகளும், தமிழ்ச் சினிமாவும் ஈழப் பிரச்சனையை முதன்மைப்படுத்தி, தமது சுயலாபங்களுக்காக பாவித்தனர். தென்னிந்தியச் சஞ்சிகைகளான நக்கீரன், ஜூனியர் விகடன், தேவி, தமிழன்தத்துரோகியின் துக்ளக் போன்றவை தமது வியாபார நோக்கத்திற்காகவும், ஈழப்பிரச்சனையைக் கொச்சைப் படுத்தவும் பாவித்தனர்.

இவர்களின் மத்தியில் ஈழ மக்களின் போராட்டம் பற்றியும், ஈழ அகதிகள் பற்றியும் நேர்மையாகவும், தமது சக்திக்கேற்ப அன்றிலிருந்து இன்றுவரை குரல் கொடுத்து வரும் பத்திரிகைகளில் "புதிய ஜனநாயகம்" குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கின்றது. இவர்கள் ஈழப்போராட்டம் பற்றி, இந்திய இலங்கை அரசியல்வாதிகளின் சந்தர்ப்பவாதங்களையும் தொடர்ந்து அம்பலப்படுத்தி எழுதி வருகின்றனர்.

ராஜீவின் கொலைக்குப்பின் தமக்கு ஆபத்து வந்துவிடுமோ என அஞ்சி ஓடி ஒளிந்த நிலையில், ஈழப்போராட்டத்திற்கு ஆதரவாகவும், இந்திய மண்ணில் வாழும் ஈழ அகதிகளை வெளியேற்ற முயற்சித்து வரும் பிற்போக்குவாதிகளை எதிர்த்து தமது அமைப்பின் மூலம் தெருமுனைப் போராட்டங்களும், தெருமுனைப் கூட்டங்கள் மூலமும் அகதிகளை வெளியேற்றுவதை எதிர்த்து பிரச்சாரம் செய்தும் வருகின்றார்கள். இந்நிலையில் இவ்வமைப்பினருக்கு அகதிகளாகிய நாமும் எமது ஆதரவை வழங்குவது அவர்களுக்கும், எமக்குமே உதவியாக இருக்கும். இச்சஞ்சிகையைப் பெற விரும்புவோர் கீழ் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

PUTHIYA JANANAYAKAM.
EDITOR: A.SHANMUGARASU.
BALAGISING STREET-21, SAIDAPET
MADRAS 600015
INDIA. (வருடசந்தா 11 USD.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ராஜினி

இன்னும் கொஞ்ச நேரத்தில்
சூரியன் மறைந்து விடுவான்.

இருள் கவிந்து விடும்

இனி வரப் போகிற இருள்
முன்பு போல அல்ல;
பிசாசு

நிலாவைக் கொலை செய்து
வெள்ளிகளைப் போட்டெரித்த
சாம்பல் பூசிய இரவு
இந்த இரவுக்கு முன்
ஒரு சிறு கை விளக்கை
அல்லது ஒரு மெழுகு திரியை
ஏற்றி விட வேண்டும் என்று
விரைந்தாய்

அம்மா,
வேகம் அவர்க் கதிகம் இன்று
தென் திசை நின்று வந்தனர்.
யமனின் தூதர்கள்;
கைத்துப்பாக்கி;
ஐந்து ரவுண்டுகள்

நீ விழுந்த போது
சூரியனின் கடைசிக் கிரணங்கள்
சுவரில் விழுத்திய
உன் நிழல்
கைகளை வீசி மேலே ஓங்கிற்று.

முடிவிலி வரை.

அட்டைப்படக் கவிதை. சேரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நீளமான காலங்கள்...

நீலவிழிகள் உனை எண்ணி நிதம் ஏங்கிப்பாட
நீலவான் அஞ்சலுக்காய் நிதம் நாடித்தேட
நீலக்கடல் தாண்டி மனம் நிதம் பறந்து ஓட
நீளமாய் காலம் என் நினைவிலே ஆடுது?

நினைவு மாலைகளை நீளமாய் தொடுத்தெடுத்து
கனவில் அவனுக்கு களிப்போடு சூடி - பின்
கனவும் கலைந்துவிட கவனமும் மாறிவிட
நினைவு நினைவாக நீளமாய் மாலைகள்.

பூக்களின் நடுவே ரோஜாவாக அவன் முகம்
பாக்களின் நடுவே பல்லவியாய் அவன் முகம்
நீக்கமற நிறைந்து நினைவெல்லாம் இனிக்க மன
தாக்கங்கள் முகத்தில் தனியாக தெரிவதென்ன?


அவனின்றி என்னால் அசைய முடியுதா?
அவனியில் அதுதான் இயற்கையின் நியதியா?
அவனோடு சேரும் நாள் தேடி தேடி
அவனையே வேண்டுகிறேன் அருள் புரிவானா?

திருமதி. வேதா. இலங்காதிலகம்.

www.tamilarangam.net

# prov noget nyt

முல்லையூரான் .1991.06.11



என்
அம்மா
பழையவள் தான்.
ஆனால் - அவளின்
முகச் சுருக்கங்கள்
எனக்குப்புதியவை.

பொப்பலவாய் 5

**சிவா** தினமும் பாடசாலைக்கு அதே புகையிரதத்தைத்தான் பிடிப்பான்.

அல்லது நேரத்தைக் கடைப்பிடிக்கத்தெரியாதவன் என்றபெயர் கேட்கவேண்டிவரும். இவன் இலங்கையிலிருந்து வந்து அகதியாக டென்மார்க்கில் வாழுகிறுனே தவிர அவனுடைய பழக்கவழக்கங்கள் எதுவுமே பெரிதாக மாறவில்லை. மாற்றிக்கொள்வதில் அவனுக்கு ஒன்றும் ஆட்சேபனைகூடக்கிடையாது. ஆனாலும் அவனுல் அப்படி மாறமுடியவில்லை. சிவாவைவிட டென்மார்க்குக்குப்பிந்தி வந்தவர்களில் அனேக-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மானவர்கள் பெருமளவு மாற்றத்-
தை அடைந்திருந்தனர்.
இத்தகையவர்களுடன் சிவா அவ்-
ளவாகப் பேச் சுக் கொடுக்கப்பய-
ந்தான், காரணம் அவர்களுடைய
கிண்டலும் கேலியும் சிவாவுக்கு
அவ்வளவாகப் பிடிப்பதில்லை.
சிவாவின் எதிர்காலம்
பற்றி அவனே அதிகம் நினைத்துப்
பார்ப்பதில்லை. அவ்வப்போது
அவனுடைய *சோசலொபீசர்* நினை-
வுபடுத்தினலுண்டு.எதிலுமே ஒரு
பிடிப்பற்ற நிலையில்சிவா இருந்தான்.
ஊருக்கு காசு அனுப்பவேண்டும்
என்கிற சுமை கூடக்கிடையாது.
ஆனலும் நிறையவே கடிதத்தொட
ர்புகள் அவனுக்கும் அவனுடைய
தாயாருக்குமிடையே இருக்கிறது.
இந்தக்கடிதப்பாலம் ஒன்றே
அவன் கடைப்பிடிக்கும் கட்டுப்பா
டுகளுக்கு காரணமாக இருந்து
வருகிறது.தாய்,தகப்பனுக்கு
சிவாவே ஒரேஒரு பிள்ளை என்பத
ஞல்தான்; அவனைவது உயிர்தப்பி
வாழட்டும் என்ற அவனுடைய
தாயாரின் விருப்பமும்; சிவாவின்
பயந்தசுபாவமும்தான் சிவா நாட்டி-
லிருந்து இடம்பெயரக் காரணமாக
இருந்தன.

காலையில் வேலைக்குச்செல்பவர்-
கள் விரைந்து கொண்டிருந்தனர்.
அது ஒரு சமர்காலம் என்பதனல்
மனிதமுகங்களில் சந்தோசமும்,
உற்சாகமும் தெரிந்தது.சிவாவைக்
கடந்து கார்கள் வேகமாகச் செ-
ன்றன.

*ரோவகெத-9*

இந்த வீட்டில் ஒரு வயதான பெண்
ணும் அவளுடைய கணவனும்தா
ன் வசிக்கின்றனர்.அந்தவீடு மிக

விசாலமானதும்,பெரிய ஒரு தோட்டத்தையும் கொண்டது.வகைவகையான மலர்கள் வளர்ப்பதே அவர்களுடையவேலை.பச்சைப்புல் நடுவே மஞ்சள்ச்செவ்வந்திப்பூக்கள் நல்லவடிவாக இருக்கும்.ஆனாலும் சிவாவுக்கு மிகவும் பிடித்தது அந்த வயதான அப்பிள் மரம்தான்.

ஒழுங்காக கத்தரிக்கப்பட்ட அந்தப்புல்வெளியில் திரண்டு நெளிந்து ஒருநடனமாதுவைப்போல நிற்கும் அந்த அப்பிள் மரத்தை அடியோடு பிடுங்க அவர்கள் முயற்சித்துக்கொண்டிருந்தனர்.>கிளடுகள்< என்று சபித்தபடிசிவா சென்றுகொண்டிருந்தான்.

*கிசோக்சந்தி*

சிவா உன்னிப்பாக பார்த்தான் அவனை இன்று காணவில்லை.செம்பட்டைத்தாடியும்,மீசையுமாக கையில் ஒரு உல்ப்போத்திலுமாய் இந்தச் சந்தியில் தினமும் நிற்பவனைக் காணவில்லையே? என்று யோசித்தபடியே சிவா நடந்துகொண்டிருந்தான்.>இனித்தான்வருவானாக்கும்< என்று வாய் முணுமுணுத்தது.

அந்தத்தாடிக்காரன்தான் சிவாவைக் கண்டு முதன்முதலில் சிரித்தவனும், அத்துடன் ஆவலுடனும் அனுதாபத்துடனும் சிவாவின் கதையைக்கேட்டவனுமாகும்.

அதனாலோ என்னவோ அந்தத்தாடிக்காரன்மீது சிவாவுக்கு ஒருபிடிப்பு ஏற்பட்டிருந்தது.சிவாவின் தனிமையை இழப்புகளை புரிந்துகொண்ட அவன் ஒருநாள், >prøv noget nyt< என்று சொல்லியிருக்கிறான்.இது ஒரு பெரிய தாக்கத்தையும், சிவாவைச் சிந்திக்கவும் வைத்தது.


www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

*கொமுனில* வேலைசெய்யிற அந்த தொக்கைமனுசி, *கிம்நாசியத்தில*படிக்கிற அந்தப் பெட்டையள், காலுக்குச்சில்லுப்பூட்டிக்கொண்டு ஓடிவாற அந்த போலந்துக்காறன்மாட்டின்,பல்லுமிதந்த *டோட்டா*, எல்லோரும் இன்றும் நிற்கிருர்கள். இந்த முகங்கள் சிவாவுக்கு தினமும் பழக்கப்பட்ட முகங்கள்.தினமும் வணக்கம் சொல்லும் அளவுக்கு மட்டும் பழக்கம் இருந்தது.கொஞ்சம் தூரம்தள்ளி அந்த ரைக்காறனும் நிக்கிறுன்.> எப்பவும் முகம்>ம்< எண்டுதான் கிடக்கும். கையில - கிடக்கிற சூட்கேசுக்கும் உவனுக்கும் என்னவித்தியாசம் சும்மாய் நிப்பான்.உவனுக்கு பொஞ்சாதி குடும்பம் இல்லப்போல< சிவா வழமையாக நீனைப்பதுபோலவே நினைத்தபடியே வந்துநின்ற றெயினில் ஏறிக்கொண்டான்.

*பயணம்*

கோதுமைவயல்களையும்,வீட்டுக்குவியல்களையும், சின்னச்சின்ன *யோபயாத்*தோட்டங்களையும் ஊடறுத்துக்கொண்டு செல்லும் அந்தப்புகையிரதத்தில் பயணம் செய்வது சிவாவுக்கு பிடித்தமான ஒன்று.ஆனுல் அதே மனிதர்களுடனும், அதே வீதிகளிலும் தொடர்ந்து பயணம் செய்வது என்பது அவனுக்குப்பிடித்திருக்கவில்லை.அதனுலோ என்னவோ யூலண்டுக்கு மாறுகிற உத்தேசம் கூடவந்தது.சிவா பல குழப்பமான நினைவுகளில் இருப்பது புரிகிறது. மாற்றங்களை விரும்புகின்றஅதேவேளை, தனது பழைய உறவுகளையும்,இழந்துவிட்ட எத்தனையோவற்றையும் நேசிக்கிருனே!

www.tamilarangam.net

www.tamilarangam.net

இடைக்கிடை புகையிரதம் நிற்பதும் சில புதியவர்களுடன், அதே பழையமுகங்கள் இறங்குவதும் ஏறுவதுமாக சிவாவின் புகையிரதப் பயணம் வழமையான அதே ஆலைச்சங்கொலியுடன்முடிந்தது.

*வகுப்பு*

அவனுடைய வகுப்பிலும் அதே மாணவர்கள்,அதேரீச்சர் அதே புத்தகங்கள்.அதே....அதே............ சிவாவுக்கு எரிச்சலும் தலையிடியுமாக இருந்தது.சிவா ரீச்சரிடம் சொல்லிக்கொண்டு வகுப்பு முடிவதற்கு முன்னதாகவே வீடு செல்லும் திட்டத்துடன் ரீச்சரிடம் கதைத்தான்.அவள் ›ஏன்‹ என்று கேட்டாள். ›ஊரில இருந்து கடிதம் வரயில்ல. தலையிடிக்குது அதுதான்...............என்றான் சிவா.

›சரி நீர் இன்றைக்குப்போகலாம், ஆனால் கடிதம் வந்ததனால் தலையிடி என்று நாளைக்கு வராமல் நிற்கக் கூடாது‹ என்ற ஒரு பத்திமதியுடன் விடைகொடுத்தாள்.

*மீண்டும் பயணம்*

சிவா வீடுநோக்கி பயணமானான். இடைக்கிடை கிசோக்சந்தியில் நிற்கும் அந்த தாடிக்காரனின் ஞாபகம் வந்துபோனது.›ஏன் வரயில்லை உவன்.... தண்ணி அடிக்கிறத விட்டிட்டானோ? அல்லது... புதியஇடம், புதியகுடிகாரநண்பர்கள் என்று மாறிவிட்டானோ? நிச்சயமாய் தண்ணி அடிக்கிறத விட்டிருக்கமாட்டான்! சாகும்வரை குடிப்பன் எண்டுதான் அண்டைக்குச் சொன்னவன்.....சரி .....என்ன இழவெண்டாலும் எனக்கென்ன‹

www.tamilarangam.net



என்று சிவாவினுல் அந்த நினைவிலிருந்து தப்பமுடியவில்லை.
>டென்மாக் வாழ்க்கை. என்ன இது, ஊருக்குவந்தால் உயிர் தப்பாது.
இப்ப வரவேண்டாமென்டு அம்மா கடிதம்எழுதிரு..அப்ப....பாலாண்ணசொல்லுறதுபோல....இஞ்சினேக்க...
பிளாயயெம்மில சாகிறதே?
இப்படி பலவிதமான நினைவுகளில் மூழ்கியபடி தனது வாடகை வீடுள்ள அந்தச்சின்னக்கிராமத்தில் இறங்கினுன்.

***கிசோக்சந்தி***

அந்தச்சந்தியில் இப்போதும் வழமைபோல அதிகம்பேர் நின்று உல் குடித்துக் கொண்டிருந்தனர். அவர்களில் சிலரை சிவாவுக்குப் பழக்கம் என்பதனுல் அருகிற் சென்று அந்தத் தாடிக்காரனைப் பற்றி விசாரித்தான்>.ஓ! நீர்................

ஊலவைச்சொல்லுறுய் போல இருக்கு... அவன் நேற்றுச் செத்துப் போனுன்.<என்றபடி அவர்கள் வேறு பக்கம் திரும்பிக்கொண்டனர். மாற்றமுடியாத அந்த மரணத்துக்கும் பிறப்புக்கும் யார் விதிவிலக்காணர்கள்.சிவா நடந்தான்.

***ரோவகெத 9***

சிவா வீடுநோக்கி தொடர்ந்தான். அவனுக்குப்பிடித்த அந்த பெரிய அப்பிள்மரம் அதேவளவுக்குள் பிரட்டி நடப்பட்டிருந்தது.அதன் அடிப்பாகத்தில் கீறல்களும் உராய்வுகளும் இருந்தன.முந்திய அழகு அதில் இப்போது இல்லை. அது வலிந்து அழிக்கப்பட்டிருந்தது.
>ஏன்இப்படி < என்று கிழவியிடம் கேட்டான்.>இந்த மரம் மிகவும் நிழல்தருகிறது, அதனுல்அதை புரட்டிவிட்டோம்.இதன் பழங்களும் சுவையானதல்ல.

அந்தஇடத்தில் பல புதிய பூக்களை நடலாமல்லவா.‹ என்றாள் கிழவி. சிவாவுக்கு தூக்கிவாரிப்போட்டது. ›என்ன உலகமிது...அவரவர் விருப்பங்களுக்காக எவரெவரோ.. எதுவெல்லாமோ.................................. எங்கெங்கோ....எப்படிஎப்படியோ.... நகரவேண்டியதாய்ப்போயிற்று.‹ புரட்டிஎடுத்து சிலமணிநேரங்களிலேயே... அது சற்று வாடிவிட்டது. இது திரும்பவும் வேர் விடுமா. இளையமரமென்றால் நிச்சயம் வேர் விடும்.இது ஒரு பழையமரமாயிற்றே....
கடிதம்பார்க்கும் ஆவலுடன் துரிதமானான்.
*பொப்பல்வாய் 5*

சிவா குடியிருக்கும் அந்த வாடகை வீடுவந்துவிட்டது.தன்னையாரோ பெயர்சொல்லி அழைப்பது கேட்டு நின்றான்.

›அட உவள் புரிசனை விட்டிட்டு இருக்கிறவள்...முன்னம் வண்டியத்தள்ளிக்கொண்டு திரிஞ்சாள்....இப்ப ஒரு வண்டிலத்தள்ளிக்கொண்டு வாறாள்...பிள்ள பெத்திட்டாள் போலகிடக்கு....ஆரது... பக்கத்த வாறது....உவன்தான் பழைய புரிசனோ?‹என்று சிவா நினைத்துக்கொண்டு நிற்க அவர்கள் அவனை நெருங்கினார்கள். அவள் அவனை அறிமுகப்படுத்தினாள்.இது எனது புதியகணவன். அவன் சிவாவோடு கைகுலுக்கினான்.வண்டிலுக்குள் அந்தச் சின்னக் குழந்தைஅழுதது.தாடிக்காரன் செத்துப்போனான்,பிள்ளை பிறந்துவிட்டது,அவளுக்கும் புதிய கணவன்.அப்போ அப்பிள் மரமும் சிவாவும்???”

www.tamilarangam.net

(13ம் பக்கத் தொடர்ச்சி)

நல்லதொரு நட்பை நிலைநாட்ட தூய இரண்டு இதயம் மட்டுமே போதும், என்ற மனப்பான்மையை கடைப் பிடித்து நட்பிற்காக நல்லதோர் வாழ்வை உருவாக்க நாம் முன்வர வேண்டும்.

முற்றும்.

- S. பிறேம்.

**பதவிளக்கம்**

| | |
|---|---|
| பொப்பல்வாய் -5 | -ஒருமுகவரி. |
| ரோவகெத -9 | -ஒருமுகவரி. |
| கிசோக் | -ஒருவகைக்கடை. |
| prøv noget nyt | -சிலபுதிதாகமுயற்சிசெய். |
| உல் | - ஒருவகை மதுபானம். |
| கிம்நாசியம் | -உயர்தர வகுப்பு. |
| சோசலொபீசர் | -சமூகஆலோசகர். |
| கொமுன் | -நகரசபை. |
| டோட்டா | -ஒரு பெண்ணின் பெயர் |
| யோபயா | -ஒருவகைப் பழக்கன்று. |
| பிளாயயெம் | -வயோதிபர் இல்லம். |
| ஊல | -ஒருஆணின் பெயர். |
| யூலண்ட் | -டென்மார்க்கின் ஒருபகுதி |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தினசரி

# 4

# காட்சிகள்

ஜீவின் • தொடர்கின்றன •

இளைப்பாற இருந்த மரத்தின் வேர்களே
இரத்தம் குடித்த கதை!

நடந்ததும் எம் வாழ்வில் தான்
நடத்தியவரும் நாமே தான்

அஃதில்லையெனில்,

மூன்று மணி நேர சுகத்திற்காக
முட்டாசுக்கடைச்சந்தியில் முழங்கால் நோக-
நின்றதேன்?
மூன்றெழுத்து நாயகன் முதலமைச்சர் ஆன-
தெப்படி??

ஆம்!

வெளிச்சத்துக்கு பயந்து இருட்டில் ஒழிந்தோம்.
நியங்களை துரத்தி நிழல்களை ஆராதித்தோம்.

அங்கு.....



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எங்கள் வக்கிரங்கள் நியாயப்படுத்தப்பட்டன.
அக்கிரமங்கள் அடித்து நொருக்கப்பட்டன.

இருட்டு வீரராக நாமே மாறி
இருபது பேரை வெட்டி விழுத்த,

காதலிக்க,
கட்டியணைக்க,
கற்பழிக்க..... வேறு எங்கு இடம் கிடைக்கும்.

நடந்தது என்ன?

சுகத்தை தேடி சுயத்தை இழந்தோம்;
அரிதாரங்கள் எங்களிலும் படியத் தொடங்கியது
துடைத் தெறிய கையும் எழவில்லை,
துயில் கொள்ளவும் நல்ல போர்வையானது.



இருட்டிய காட்டினில் அக்கினிகுஞ்சுகள் என
சில எழத்தான் செய்தன!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால்;

புதிதாய் வேதம் எழுதியவனுக்கு கூட
ஆராதிக்க M.G.R புஷ்பமே தேவைப்பட்டது

புதுப்புது அர்த்தம் படைக்கப் புறப்பட்டவருக்கு கூட
எதிர் நீச்சல் அடிக்க தெம்பிருக்கவில்லை

"திரைச் சுருள்களை எல்லாம் ஓர் சின்ன தீக்குச்சிக்கு
தின்னக் கொடுப்போம்" என

கவிதை பாடிய வைரமான முத்துகள் எல்லாம்
சிலுக்கின் ஒட்டியாணத்திற்கு
கண்ணாடிக் கற்களாக பதிந்தது.

திட்டமிட்ட திருவிளையாடல்களுக்கு ஓர் கலைப்பூச்சு!
நடாத்தியவனோ வசந்தமாளிகைகளில்;
நம்பியவனோ எச்சில் இரவுகளில்.

எந்த ஞானப்பறவையுமே வழிகாட்டத்தவறியதால்
அனைத்துமே திசைமாறிய பறவைகளாயின

முடிவு!

அலைகளும் ஓயவில்லை,
கைகளும் இணையவில்லை,
பெண்ணும் அடிமையானாள்,
பிறந்தமண் சிவந்தமண்ணாகியது!

தேவை!!

மீண்டும் ஓர் பூம்புகார்.


அதுவரை!!!

அனைத்துக்குமே ஓர் அஞ்சலி.

...தொடரும்...

www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப் போட்டி இல: 15



சஞ்சீவியின் குறுக்கெழுத்துப் போட்டி இல: 15 மூலம் உங்கள் எல்லோரையும் சந்திப்பதில் மகிழ்ச்சி கொள்கிறேன். போட்டிக்கு நீங்கள் தயார் தானே....

. கேள்விகள்: இட - வலம்

3. 24: காரியாலயத்தில் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு ஊழியரை இப்படியும் கூறுவர்.

4. 10: கடையடைப்பு, தெருமறிப்புப் போன்ற போராட்டங்களை இப்படியும் பெயர் கொண்டு அழைப்பர்.

7. 46: ஒவ்வொரு மனிதனது வாழ்விலும் "இப்பாடு" முக்கியமானது.

14. 1: மனை, வீடு போன்று இதுவும் ஒன்று.

15. 41: வெளி மண்டலத்தில் வாயு அதிக அளவில் "—" அடையும் போது பல தீய விளைவுகள் ஏற்படும். இது இங்கு குழம்பியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

19. 6: தென்னாசிய நாடுகளுள், சில நாட்டு மக்கள் பழமையான கலாச்சார முறையினைப் பயன்படுத்தி அணியும் ஆடையலங்காரமொன்றிற்கு இது பெயர்.

23. 30: சாதாரணமாக தண்ணீர் மொள்ளும் ஓலைப் பட்டையின்பின் வந்த தகரப்பட்டைக்கு இது பெயர்.

36. 49: பல நாடுகளுள் இது இருந்தாலும், எமது தாய் நாட்டு மக்களுக்கு அடாவடித்தனம் புரிவோராய் கடுமையாக நடக்கிறது. இது குழம்பியுள்ளது.

44. 22: "மேசன்"க்கு உதவும் வேலையாளரை இப்படியும் அழைப்பர்.

47. 32: இந்தியாவின் ஓர் குறிப்பிட்ட பகுதிக்கு இந்தப் பெயர் உண்டு. மன்னராட்சிக் காலத்தில் அதிகம் இப் பெயர் பாவனையில் இருந்தது ஆனால் இங்கு குழம்பியுள்ளது.

52. 40: மீனுள் இருக்கும் முட்டைகள் சேர்ந்ததோர் பையினையும் இப்படிக் கூறுவர்.

## போட்டியின் விபரங்களும், நிபந்தனைகளும்

அ. போட்டியில் கலந்துகொள்வோர் இதழின் இறுதிப்பக்கத்தில் உள்ள போட்டிக் கூப்பனை பூர்த்தி செய்து » 20.11.91 « திகதிக்கு முன்னதாக சஞ்சீவிக்கு அனுப்பவைத்தல்.

ஆ. சரியாகவும் தெளிவாகவும் பூர்த்தி செய்யப்பட்ட போட்டிக் கூப்பன்கள், குலுக்கல் முறையில் 1,2,3 ம் பரிசுகளுக்கான தகுதியினைப் பெறுவதோடு, சரியான விடைகள், பரிசுக்குரியோரின் விபரங்களும் அடுத்து வரும் இதழில் வெளியிடப்படும். பரிசில்கள் உரியவர்களுக்கு காலக்கிரமத்தில் சஞ்சீவியால் அனுப்பிவைக்கப்படும்.

www.tamilarangam.net

## கேள்விகள் : மேல் - கீழ்.

1. 4: எமது தாய்நாட்டில் நாம் வாழ்ந்தபோது சுவைத்துப்போன பல உணவுவகைகளில், இங்கு நா-ஊற வைக்கும் ஓர் உணவே .... இது குழம்பியுள்ளது.

7. 6: சிலர் கதைக்கும்போது இதுபோல் ஒட்டுவார்கள்.

7. 11: இடத்துக்கேற்ப தனது நிறத்தினை மாற்றும் - இந்த "ஓணான்" இனம்போல், சந்தர்ப்பத்துக்கு ஏற்றாற் போல் தம்மையே மாற்றிக் கொள்ளும் "இந்த" மனிதர்களும் சிலர் உளர்.

14. 16: பொதுவாக நாம் மூத்த சகோதரியை முறை கொண்டு அழைப்பது இப்படியே.

19. 20: இது இருந்தும் பலர் குருடாக உள்ளனர்.

25. 22: வயலில் மனித வலுவால், நெல் அறுவடை செய்யும்போது 'இது' பெரிதும் உதவும்.

28. 27: ஒரு யுகத்தின் பெயர் இது.

33. 30: இந்த "—" மகன் அன்றாடம் உழைத்து உண்பவன், நாட்டின் குடிமகன் எனும்போது, இவனுக்கே முதல் விடிவு, சுதந்திரம், வாழ்வில் உயர்வு வேண்டும்.

33. 36: வாழ்வில் நல்ல முன்னேற்றம், பரீட்சையில் நல்ல முடிவு, போட்டியில் வெற்றி என்பன போன்ற விடயங்களின் போது பலரிடமிருந்து "இது" கிடைக்கும்.

41. 40: ஒரு நாட்டின் நில அமைப்பில் வெளி நோக்கி கூர்மையாக இருக்கும் பகுதியினையும், வாளின் நுனியினையும் இப்படி அழைப்பர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

43. 46: கொடுமையாக ஆட்சி நடாத்தும் முடிக்குரி-
ய அரசினை, மக்கள் கவலை கொண்டு இப்படி
இகழ்வர். இது குழம்பியுள்ளது.

47. 46: ஏறிய "குன்று" உள்ள இடத்தின் காரண இடுகுறிப்-
பெயரான இது, இலங்கையில் மத இஸ்த்தலம்
ஒன்று உள்ள இடத்தின் பெயராகவும் உள்ளது.

50. 49: ஈழ நாட்டின் பிரச்சனையில், பலர் வாயிரு-
ந்தும் பேச முடியாத நிலையில் "இப்படி"யாக
உள்ளனர்.

---

## சுவிஸ்: மீண்டும்! அகதி முகாம் எரிப்பு :

தூணில் உள்ள Seestrasse (Bern) இல் அமைந்திருக்கும் அகதிகள் முகாம் சனி அதிகாலை இரண்டு மணிக்கு தீவைப்பிற்குள்ளானது மோட்டார் சைக்கிளில் வந்த இரு 'புதிய நாசிகள்' பெற்றோல் குண்டினை அகதி முகாமிற்குள் வீசியுள்ளனர். முகாம் எரிவதனை முகாமில் படுத்திருந்த இருவர் கண்டதினால் எதுவித உயிர்ச்சேதமும் இல்லாமல் அகதிகள் தப்பிக்கொள்ள முடிந்தது. இருவர் காயமடைந்துள்ளனர். இம்முகாமில் தமிழ் அகதிகளுடன் ஆபிரிக்க, துருக்கி நாட்டைச் சேர்ந்த அகதிகளுமாக மொத்தம் நாற்பது பேர் உள்ளனர்.

சுவிற்சலாந்து தனது 700 வது ஆண்டு விழாவை கொண்டாடும் இவ் வேளையில் அகதிகளுக்கெதிரான நடவடிக்கைகளும் அதிகரித்து காணப்படுகிறது

நன்றி: மனிதம்

www.tamilarangam.net

போட்டி இல: 14ன் சரியான பதில்களும், பரிசு பெறுவோர் விபரங்களும்:

**பதில்கள்: இடம் வலம்.**


2. 38: சுதந்திரம்.
5. 18: வைகாசி.
6. 19: தட்டு.
7. 46: விடுதலை.
14. 13: படை.
27. 40: அடவி.
29. 16: சிந்து.
31. 48: கந்திரை.
47. 34: கங்கா.
49. 36: அடம்.
–51 –: ஓ.

**மேல்: கீழ்.**

3. 2: மாசு.
7. 5: விதவை
7. 10: விடுகாலி.
11. 16: பந்து.
12. 13: தடை.
18. 20: சிட்டு.
23. 25: மந்தி.
27. 29: அரசி.
33. 36: தங்கம்.
38. 39: (—).
42. 46: ஆடற்கலை.
49. 46: அதிகாலை.

1வது இடம்:

Ramesh Ratnasingam
By Bakterrassarane - 147 F
3520 Farum.



2வது இடம்:

K. Thipakaran
Nygårdterrasserne - 267 E
3520 Farum.

3வது இடம்:

T. Sivaneswaran
8st th. Ellekkonebakken
8800 Viborg.

போட்டியில் வெற்றியீட்டியோருக்கும், கலந்துகொண்டோருக்கும் சஞ்சீவி சார்பில் வாழ்த்துக்களும், மகிழ்ச்சியும் தெரிவித்துக்கொள்கிறேன். பரிசில்கள் உரியவர்களுக்கு காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும். ஜமீல். லோகா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

7ம் பக்கத் தொடர்ச்சி



போக முடியாதென தனித்தனியாக விசாரிக்கப்படுவார்கள். இவ் விசாரணையில் கூறப்படும் காரணம் ஏற்றுக்கொள்ளப்படவில்லையெனில் இந்த அகதிகள் திருப்பியனுப்பப்படுவர்.

அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்களைத் திருப்பியனுப்பாமல் மனிதாபிமான முறையில் தமது நிர்வாகத்திற்குட்பட்ட மாநிலங்களில் தங்க அனுமதிப்பதற்கு இதுகாலவரை மாநில அமைச்சர்களுக்கு இருந்த அதிகாரம் யூன் மாதம் 30ஆம்திகதியுடன் காலாவதியாகிவிட்டது. அகதிகளைத் திருப்பியனுப்புவதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் யூலை 1 ஆம் திகதியிலிருந்து மத்திய அரசாங்கத்திற்கு மட்டுமே உண்டு.இம் முடிவே அனைத்து மாநிலங்களுக்கும் பொதுவானதாயிருக்கும்.

அகதிகளை நாடுகடத்துவது தொடர்பாக இம்மாதம் 16 ஆம் திகதி மத்திய அரசு உள்நாட்டமைச்சரினால் மாநில அரசுகளின் உள்நாட்டமைச்சர்களுடன் கூட்டப்பட்ட கூட்டத்தில் கீழ் வரும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இக் கோரிக்கைகளை உள்நாட்டமைச்சர் சொய்பின் இதுவரை நிராகரிக்காததால் இவை நடைமுறைப்படுத்தப்படும் என்று பலராலும் நம்பப்படுகிறது.

1. 31.12.88க்கு முன்னர் அரசியல் தஞ்சம் கோரி, தஞ்சம் நிராகரிக்கப்பட்ட லெபனானியர்,ஈரானியர், லெபனானிலிருந்து வந்த பலஸ்தீனியர்,குர்திஸ்தானியர்,தமிழர் ஆகியோருக்கு Aufenthaltbefugnis பத்திரத்தைத் தற்காலிகமாக வழங்குதல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

2. 31.12.88க்குப் பின்னர் அரசியல் தஞ்சம் கோரி, தஞ்சம் நிராகரிக்கப்பட்ட தமிழர்,அப்கானிஸ்தர் ,ஈராக்கிலிருந்து வந்த குர்திஸ்தானியர் ஆகியோருக்கு 31.12.91வரை டுல்டுங் பத்திரம் வழங்குதல்.பின்னர் நாடுகடத்துவது.

3. 31.12.88க்குப் பின்னர் அரசியல் தஞ்சம் கோரி, தஞ்சம் நிராகரிக்கப்பட்ட லெபனானியர்,சூடானியர் ,துருக்கியிலிருந்து வந்த கிறிஸ்தவர்,ஜெஸிடியர், சிரியாவிலிருந்து வந்த கிறிஸ்தவர்,பாகிஸ்தானிலிருந்துவந்த அகமடிஸியர்,யூகோஸிலாவியர் ஆகியோரை உடனடியாக நாடுகடத்தல்.

எனினும் இக் கோரிக்கைகளை தாங்கள் ஏற்கப்போவதில்லையென்றும்,தமிழரையும், லெபனானியரையும் நாடுகடத்தவேண்டும் என்றும் சி.டி.யூ. ,சி.எஸ்.யூ கட்சிகளின் நிர்வாகத்தின் கீழுள்ள மாநில அரசுகளின் உள்நாட்டமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

அகதிகளைத் திருப்பியனுப்ப முயற்சிக்கும் மத்திய அரசின் முடிவை எதிர்த்து சர்வதேசமன்னிப்புச் சபை,மனித உரிமைச்சங்கங்கள்,அகதி உதவி நிறுவனங்கள்,அகதிக் குழுக்கள், மற்றும் பல ஸ்தாபனங்கள் தமது எதிர்ப்பைத் தொடர்ந்து வெளிக்காட்டி வருகின்றன .ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள் ,பொதுக்கூட்டங்கள்,கையெழுத்துச் சேகரிப்பென அகதிகளும், ஜேர்மன் மக்களும் சேர்ந்து பரவலான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். எனினும் ஒவ்வொருநாட்டு அகதிகளும் இந்த நெருக்கடியில் கூட கூட்டாகச் சேர்ந்து செயற்படாதது வேதனைக்குரியது.

புதிய வெளிநாட்டவர் சட்டங்கள் அகதிகளுக்கு எதிராக கடுமையாகவே இருக்கின்றன. இந்நிலையில் அகதிகள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும்பொருட்டு கீழுள்ள நடைமுறைகளைக் கவனத்திலெடுக்குமாறு சட்டத்தரணிகள் ஆலோசனை தெரிவிக்கிறார்கள்.

1. வெளிநாட்டவர் அலுவலகத்திலிருந்து தாய்நாட்டுக்குத் திரும்பிப்போகும்படி அல்லது திருப்பியனுப்பவது குறித்து கடிதம் கிடைத்தால் உடனடியாகச் சட்டத்தரணியுடன் தொடர்புகொள்ளவேண்டும்.இம்முடிவை எதிர்த்து மேன்முறையீடு செய்யத் தரப்படும் அவகாசம் 1 வாரகாலம் மட்டுமே.

2. சட்டத்தரணிகளின் ஆலோசனையின்றி வெளிநாட்டவர் அலுவலகத்தில் தரப்படும் எந்தப் பத்திரத்திலும் கையெழுத்திடவேண்டாம்.

www.tamilarangam.net

3. அரசியல் தஞ்ச விண்ணப்பம் முடிவுறாதவர்கள் எச் சந்தர்ப்பத்திலும் தமது தஞ்சத்தை ரத்துச் செய்யக்கூடாது.

நாடு கடத்தப்படவிருக்கும் பயத்தினால் பலர் வேறுநாடுகளுக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள் .எல்லை கடக்கும்போது பொலிசாரால் பிடிக்கப்பட்டால் நாடுகடத்தப்படுவதற்கு இதுவே போதுமான காரணமாகிவிடும்.

நாடு கடத்தும் திட்டத்தை சுவிஸ்,பிரான்ஸ்,பிரிட்டன் ஆகிய நாடுகளும் வைத்திருக்கும் செய்திகள் இப்போது வெளியாகியுள்ளன.பிரான்ஸில் விஸா இல்லாமலுள்ள 3 இலட்சம் வெளிநாட்டவரில் சுமார் 1 இலட்சம் பேர் இவ்வருட இறுதிக்குள் நாடுகடத்தப்படவுள்ளார்கள் .அத்துடன் வேலைத் தடைச் சட்டமும் நடைமுறைக்கு வரவுள்ளது.

சுவிஸிலிருந்தும் தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்கள் நாடுகடத்தப்படவுள்ளார்கள். வேலைத் தடைச்சட்டம் 3 மாதங்களிலிருந்து 6 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. ஏனைய ஐரோப்பிய நாடுகளும் இவற்றையே பின்பற்றும் என்பதில் சந்தேகப்படத் தேவையில்லை.

எனவே அனைத்து நாட்டகதிகளும் ஒன்றிணைந்து இம் மனிதவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராகச் செயற்படவேண்டும். அத்துடன் தாங்கள் நாடுகளில் நடக்கும் மனிதாபிமான மீறல்களையும், அரச பயங்கரவாதங்களையும், அங்குள்ள மக்களின் துயர்களையும் தாங்கள் தஞ்சம் கோரியுள்ள நாட்டின் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். அகதிகள் எப்படி உருவாகுகிறார்கள் என்பதையும்,இதற்குப் பின்புலங்களாகவிருந்து மேற்கு நாடுகள் எப்படி வன்முறைகளைத் தூண்டிவிடுகின்றன என்பதும் எடுத்துக்காட்டப்படவேண்டும்.

தமிழ் அகதிகளைப் பொறுத்தவரையில் இந்நாடுகளிலுள்ள புலிகளின் கிளைகளே ஈழப்பிரச்சினைகள் பற்றிய பிரச்சாரங்களை கூடுதலாக மேற்கொண்டு வருகின்றன. இதற்கான நிதி உட்பட போதுமான வசதிகள் இவைக்குள்ளன. எனினும் இவைகளின் பிரச்சாரங்கள் புலிகள் பற்றிய பிரச்சாரங்களாகவே நடைபெறுகின்றன என்பதும்,இதில் மக்கள் பற்றிய உண்மைகள் அடிபட்டுப் போய்விடுகின்றன என்பதும் தெரிந்ததே.

எனவே சரியான,உரிய ,தகவல்களைத் தேடி ,வெளிக்கொணர எல்லோரும் முன்வரவேண்டும். புகைப்படக் கண்காட்சி,பிரசுரங்கள்,பொதுக்கூட்டங்கள்.... என்று எல்லாவழிகளிலும் எங்கள் நாடு

www.tamilarangam.net




களின் உண்மைநிலைகள் வெளிக்கொணரப்படவேண்டும். இவற்றை இந்நாட்டவர்களுக்காக மட்டுமல்ல, எம் நாட்டவர்களுக்காவும் செயற்படுத்தவேண்டும் என்பது கசப்பான உண்மை.

– ரஞ்சித்

நன்றி: தூண்டில்

அரசுடன் சேர்ந்து போராடும் நாம் தனிநாடு பிரிவதை விரும்பவில்லை என்பதால் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை மீட்பதிலும் எமக்கு அக்கறையில்லை என்பது அர்த்தமல்ல.

(பத்திரிகையாளர் மகாநாட்டில் டக்ளஸ் தேவானந்தா)

எமது காலத்தில் ஆனந்த குமாரசாமி, சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம், சேர். ஜேம்ஸ் பீரிஸ், ஜோர்ஜ ஆர். டி. சில்வா, டி. வி. ஜாயா போன்றவர்கள் எதுவித இனபேதமுமின்றி 'சிலோன் காங்கிரஸ்' என்ற அமைப்பின் கீழ் ஒற்றுமையாகப் போராட்டம் நடாத்தினார்கள். ஆனால் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்தில் நாம் எப்படி இந்த ஒற்றுமையை இழந்தோம் என்பது சிந்தித்துப் பார்க்க ஆச்சரியமான விடயமாகவுள்ளது.

(ஆனந்தகுமாரசாமி ஞாபகார்த்தப் பேருரையில் ஜே.ஆர்.)


நன்றி: தூண்டில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# குறுக்கெழுத்துப் போட்டி இல:15




உங்கள் கருத்துக்கள்

அலுவலகப் பாவனைக்கு:

www.tamilarangam.net



www.tamilarangam.net

# இரண்டாவது ஆண்டு நினைவுகளுடன்....

## விமலேஸ்வரன்
(யாழ். பல்கலைக் கழக மாணவன்)



இந்த மரணத்திற்கு எல்லா மனிதர்களும்
பதில் சொல்லட்டும்!
வெற்றுக் காற்றும் வெறும் பூமியுமாய்
அவர்கள் ஆகட்டும்!!

www.tamilarangam.net

"CHANCHIVE"
Postbox:1205
7500 Holstebro
Danmark.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்